December 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

December 2018 சுவடி—8 ஓலை— 10


## வணக்கம் பல

பனி விழும் காலம் துவங்குகிறது. உலகின் பெரும்பகுதியைப் வெண் படலம் சூழ்ந்து குளிரூட்டப் போகிறது. உலக அரசியலிலும் இதுபோன்ற பனிப்படலம் சூழ்வதைப் பனிப்போர் என்று அழைக்கிறோம். இலங்கையில் அப்படியான பனிப் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் விருப்பத்தைப் புறந்தள்ளி பின் வாசல் வழியே ஆட்சியில் அமர்வது நானா நீயா என்ற போட்டியில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் பல நடைபெற்றன, ஆனால் இந்த நாடகங்கள், ஈழத் தமிழர்களின் எதிர்கால நம்பிக்கைக்குத் தீர்வாக அமையுமா என்றால், நிச்சயம் இல்லை!

நடுநிலையாளர்கள் போலக் காட்டிக் கொள்ளும் இலங்கை இனவாத நல் ஆட்சியாளர்கள் ஒருபோதும் தங்களது இனவாதக் கொள்கையை விட்டு விலகாதவர்களாகவே நிற்கிறார்கள் என்பதைப் பல தசாப்தங்களாக ஈழத்தமிழ் மக்கள் கண்டு வருகிறார்கள். உலக வல்லரசுகள் இலங்கையின் இனவாதப் போக்குக்கு எதிராக ஒரு துரும்பையும் இதுவரை நகர்த்தியதில்லை! நிலைமை இப்படி இருக்க, உலகம் முழுதும் உள்ள மனிதநேய அமைப்புகள் உலக அமைதிக்கான தூதுப் புறாக்களைக் கண்காட்சி போல பறக்க விட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. சட்டமும் திட்டமும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் இருந்தும் பயனில்லை!

ஐ.நா. போன்ற அமைப்புகள் இதுவரையிலும் ஈழத்தில் நடந்த படுகொலைகள் குறித்து தீர்ப்பையோ, தீர்வையோ, எதிர்கால வாழ்வுக்கு மனிதநேய அடிப்படையில் எந்த உத்தரவாதமோ வழங்கவில்லை எனும்போது இப்படிப்பட்ட அமைப்புகள் இருந்துதான் என்ன பயன்? இலங்கையின் எந்தவொரு அதிபரும் ஈழத் தமிழர்களின் வாழ்வில் ஒளி ஏற்றவில்லை! இருந்தவரும் இருப்பவரும் ஈழத்தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்ததில்லை! நிலைமை இப்படியிருக்க, இலங்கையில் எந்த ஆட்சி நடந்தாலும் காட்சி மாறப்போவதில்லை என்ற நிலையை உலக நாடுகள்தான் மாற்றிக் காட்ட முன்வர வேண்டும்! அதுவே இந்த உலகம் அன்பின் மீதும் சமூகத்தின் மீதும் அக்கறை கொண்டிருப்பதற்கான அடையாளம் ஆகும்! அப்படியொரு அடையாளம் ஈழத்தின் மீது வெகுவிரைவில் பதியுமா?

பதியவேண்டும் என்பதையே நமது வேண்டுதலாகும் தூண்டுதலாகவும் மனித சமூகத்தின் முன் வைக்கிறோம்.உலக மாந்தர்கள், தங்களுக்குள் நிகழ்த்தும் பனிப்போர்களைப் புறந்தள்ளி, இயற்கை நிகழ்த்தும் மண்ணையும் மனிதனையும் மகிழ்விக்கும் பனிக்காலத்தை வாஞ்சையுடன் வரவேற்போம்! அனைவருக்கும் நத்தார் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




- தமிழரை மீளழிக்கும் சிங்கம்
- பிரியாத வரம் வேண்டும்
- இனி ஒரு விதி செய்வோம்
- ஓங்கும் சர்வாதிகாரம்
- வானுயர்ந்த சிலை வயிறுகாய்ந்த நிலை
- அறிவோம் தமிழர் பெருமை
- மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
- சிவகாமியின் சபதம்
- மராமத்தில்லா பெருஞ்சுவர்
- மருத்துவ தமிழ்
- ஒருதாய் பிள்ளை



**IThamil Monthly Magazine**

Chief Editor & Publisher
Sivanesan

Editor
Khottravan

Editorial Team
Ganesan
Navani
Shanthakumar

Art Editor
Sriram

Art & Marketing Director
Jaya

Printers
Kanagam Pathippagam

Contact us:
editor@ithamil.com



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது



# தமிழரை மீளழிக்கும்

*எங்கே போகிறது இலங்கை அரசியல்?*

இராம காதை தொடங்கியது முதற்கொண்டே இலங்கைத் தீவானது அரக்கர்களின் கூடாரம் என்ற ஒரு புராதனக் கதை நிலவி வருகிறது. இதில் ஆதித் தமிழர்களும் வசித்து வந்ததற்கான அழுத்தமான சான்றுகளும் இருந்தே வருகிறது. எனவே தமிழர்களுக்கும் அரக்கர்களுக்குமான போராக இலங்கைத் தீவில் நிலவி வரும் போர் மேகமும், குழப்பமான அரசியலும் இன்றும் தீர்ந்தபாடில்லை!

ஆட்சியில் யார் அமர்ந்தாலும், குழப்பங்களும், கலவரங்களும் வெடிக்கும் இடமாகவே இலங்கை இன்றுவரை இருந்துவருவது காலத்தின் கட்டளையேயா என்னவோ? இப்போது இலங்கையில் நிகழும் கூத்துக்களை உலகம் அமைதியாக வேடிக்கைப் பார்க்கிறது.






இலங்கை அதிபர் மைத்ரிபால சிறீசேனா, இலங்கையில் இரண்டு பிரதமர்கள் இருக்கும் நெறியற்ற நடைமுறையை உருவாக்கியது, நாடாளுமன்றத்தை அதன் தலைவரின் ஆலோசனையைப் பெறாமலேயே தனது விருப்பத்திற்கேற்ப ஒத்திவைத்தது, நாடாளுமன்ற ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்து தெருச்சண்டை போல அங்கு கலவரத்தை உண்டாக்கி, அதன் தலைவர் முகத்தில் மிளகாய் பொடியைத் தூவி, அவரை இருக்கையில் அமர விடாமல் ராஜபட்ச ஆதரவாளர் கூத்தடித்தது, இந்த கூத்துக்கு மைத்ரிபால சிறீசேனா துணை போனது — இவற்றையெல்லாம் உலகமே கவனித்துக் கொண்டிருக்கிறது.

ராஜபட்ச பிரதமராக நியமிக்கப் பட்டதற்கு எதிராக இலங்கை நாடளுமன்றத்தில் சில தினங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்கீழ், இருமுறை குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அம்முடிவை ஏற்க




சிறீசேனாவும் ராஜபட்சவும் மறுத்துவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, இலங்கை நாடாளுமன்றத்தை வழிநடத்துவதற்கு சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவின் ஆதரவு உறுப்பினர்கள் பெரும்பான்மை பெற்றனர். இதற்கு சிறீசேனா ஆதரவு உறுப்பினர்கள் எதிர்ப்பு



தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

இத்தனைக்குப் பிறகும் விக்ரமசிங்கவை ஒருபோதும் பிரதமர் பதவியில் நியமிக்க மாட்டேன் என்று சிறீசேனா திட்டவட்டமாகக் கூறுகிறார். ரணில் விக்ரமசிங்க, பிரதமர் பதவியில் அமரக் கூடாது என்ற ஒரே நோக்கத்தில் மைத்ரிபால சிறீசேனா தொடர்ந்து செயல்பட்டு வந்ததற்கு உலக நாடுகள் கவலை தெரிவித்தன.

அமெரிக்க நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் கிறிஸ்வான் ஹோலன், அதிபர் சிறீசேனாவுக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அதில், இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை நீங்கள் பதவி நீக்கம் செய்ததும், அதன் தொடர்ச்சியாக இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை ஏற்க மறுத்ததும் மிகுந்த வருத்தமளிக்கின்றன. இலங்கை அரசமைப்புச் சட்டத்துக்கு மதிப்பளித்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முடிவுகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

மைத்ரிபால சிறீசேனா, அதிபராக இருந்து, ராஜபட்சவுக்கு மகுடம் சூட்டினாலும், சிறீசேனாவை ராஜபட்ச பெரிதாக மதிக்கவில்லை. சிறீசேனாவும், ராஜபட்சவும் கலந்து கொண்ட பொது நிகழ்வில் அந்நாட்டு தேசியப் பண் இசைக்கப்பட்ட போது சிறீசேனாவின் கையை ராஜபட்ச அலட்சியமாக தட்டிவிட்டார். இதனைக் கவனித்தபோது, ராஜபட்ச, தனக்குக் கீழே அந்நாட்டு சுகாதாரத் துறை அமைச்சராக சிறீசேனா இருந்தபோது அவரை எப்படி நடத்தினாரோ அந்த அளவிலேயே இப்போதும் அவர் அதிபர் என்றுகூட நினைக்காமல்

நடத்துகிறார் என்பது புரிந்தது.



ராஜபக்சவின் இலங்கை சுதந்திரக் கட்சியில் இருந்தவர் என்பதோடு, அவருடைய அமைச்சரவையிலும் இருந்தவர் சிறிசேனா. அதிரடி நடவடிக்கையாக ராஜபக்சவை சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கியதோடு, 2015 தேர்தலுக்குப் பின்னர் 'தேசிய அரசு' என்ற பெயரில் எதிர்க்கட்சியான ரனிலின் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து கூட்டணி அரசை நிறுவினார் சிறிசேனா. இந்தத் தலைகீழ் மாற்றங்கள் அவ்வளவுக்கும் மைய நோக்கமாக இருந்தது ராஜபக்சவை அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றுவது. ராஜபக்சவின் அரசியலும் முடிவுக்கு வந்துவிட்டதுபோலவே தெரிந்தது.

ஆனால், இந்த மூன்று ஆண்டுகளில் சிறிசேனாவுக்கும் ரனிலுக்கும் இடையே பல்வேறு விஷயங்களில் முரண்பாடுகள் தோன்றின. விளைவாக பிப்ரவரியில் நடந்த உள்ளாட்சித் தேர்தலை இரு கட்சிகளும் தனித்தனியாகவே சந்தித்தன. இந்த இரு கட்சிகளைத் தாண்டி தேர்தலில் மூன்றாவது முனையில் இருந்தது ராஜபக்ச தொடங்கிய பொதுஜன பெரமுனா. ஆச்சர்யமூட்டும் வகையில் தேர்தலில் அதிக இடங்களை அது வென்றது. தோல்விக்கான காரணம் குறித்து சிறிசேனா, ரனில் இருவரின் கட்சிகளும் தங்களுக்குள் பரஸ்பரம் குற்றம்சாட்டிவந்தன. இதனிடையே ரனில் அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ரனில் அதில் வென்றார்.






சிறிசேனாவைக் கொலை செய்யும் சதித் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக ஒரு செய்தி வந்தது. இந்தச் சதியில் ரனில் பெயரும் இந்திய உளவுத் துறையின் பெயரும் உச்சரிக்கப்பட்டன. பின்னர் மறுக்கப்பட்டன. அடுத்த சில நாட்களிலேயே பிரதமர் பதவியிலிருந்து ரனில் நீக்கப்பட்டு, ராஜபக்ச அமர்த்தப்படும் அறிவிப்பை வெளியிட்டார் சிறிசேனா. இந்தியா — ரனில் இடையிலான நெருக்கம் சிறிசேனாவுக்குப் பிடிக்கவில்லை என்றும், ரனிலுக்கு நெருக்கடியை உண்டாக்கவே சீனாவுக்கு நெருக்கமான ராஜபக்சவுடன் கை கோர்க்கிறார் என்றும்கூட செய்திகள் வெளியாயின.

இலங்கையின் சமீபத்திய அரசியலமைப்புப்படி பிரதமர் பதவியில் இருப்பவரை, அதிபர் தன் அதிகாரத்தில் நீக்கிவிட முடியாது. பிரதமராக இருப்பவர் அந்தப் பதவியை ராஜினாமா செய்தாலோ, நாடாளுமன்றத்தின் நம்பிக்கையை பிரதமர் இழந்துவிட்டாலோதான் புதிய பிரதமரை அதிபர் நியமிக்க முடியும். ஆனால், 'நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றவர் என்று தான் நம்பும் ஒருவரை அதிபர் நியமிக்கலாம்' என்ற சட்டப் பிரிவை சிறிசேனா பயன்படுத்தியிருக்கிறார் என்கிறார்கள் சட்ட நிபுணர்கள்.

நாடாளுமன்றத்தில் மொத்தம் 225 உறுப்பினர்கள். பெரும்பான்மைக்கு 113 இடங்கள்



தேவை. ராஜபக்ச, சிறிசேனா கூட்டணிக்கு 95 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். ரனில் தரப்பில் 106 பேர் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் முடிவு இதில் முக்கியப் பங்காற்றும் என்று தோன்றுகிறது. இலங்கையில் கட்சித்தாவல் தடைச் சட்டமும் கிடையாது என்பதால், ரனில் கட்சியை உடைக்கும் முயற்சியில் ராஜபக்ச கட்சி ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ராஜபக்ச கை ஓங்குவதற்கான சாத்தியங்களே அதிகம் தென்படுகின்றன.சிறீசேனா—ராஜபட்ச இடையேயான உறவு தற்போது விரிசலடையத் தொடங்கியுள்ளது என்பதே உண்மை. ஸ்ரீலங்கா சுதந்திரா கட்சியை சேர்ந்த அனுதாபிகள் சந்திரிகாவுடன் இணைந்துவிட்டனர். ரணிலை விரட்ட நினைத்த சிறீசேனா இப்போது தனிமரமாக உள்ளார். இப்படிப்பட்ட நிலையில், இலங்கையில் மகிந்த ராஜபட்சவின் அதிபர் வேட்பாளராக எதிர்காலத்தில் சிறீசேனா இருக்கமாட்டார் என்றும் அவருக்கு பதிலாக சமல் ராஜபட்ச இருக்கலாம் என்றும் செய்திகள் வருகின்றன.

இப்படி தினமும் இலங்கையில் கேலிக்கூத்துகள் நடக்கின்றன. சீனா மட்டும் அவர்களுக்கு ஆதரவாக ஓங்கி குரல் கொடுக்கின்றது. நீதிமன்றத்தையும், நாடாளுமன்றத்தையும், அரசியல் கோட்பாடுகளையும் மதிக்காத ஒருவருக்கு சீனா எதற்கு ஆதரவு கொடுக்கிறது என்று இந்தியா யோசிக்கவில்லை. அங்கு ஜனநாயகமும் ஜனநாயகத்தின் கூறுகளும் மதிக்கப்படாமல் இருக்கின்ற அசாதராண நிலை உள்ளது.

மான்டெஸ்கியூவின் அதிகாரப் பகிர்வு கோட்பாட்டின்படி, நாடாளுமன்றம், நீதிமன்றம், ஆட்சி அதிகார மையம் ஆகியவை, தங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலைகளில் இயங்க வேண்டுமென்பதே ஜனநாயகத்தின் அடிப்படை. கடந்த ஒரு மாத காலமாக பிரெஞ்சு 16—ஆம் லூயியைப் போல சர்வாதிகாரப் போக்கில் இலங்கை அதிபர் சிறீசேனா, தானே அரசு என்பது போல நடந்து வருகிறார்.



பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள், இலங்கை அதிபரின் இந்த போக்கைக் கண்டித்துள்ளன. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலும், அமெரிக்க செனட்டிலும் இந்த பிரச்னை விவாதிக்கப்பட்டு, இலங்கை அதிபர் ஜனநாயக நெறிமுறையிலிருந்து வழுவாமல், அதை முன்னெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆனால், இந்தியாவோ இது குறித்து எந்தக் கருத்தும் கூறாமல், நடப்பதை மௌனமாக கவனித்து வருகிறது. அது அயல்நாட்டு பிரச்னை; அதில் நாம் தலையிட முடியாது என்று கூறுகிறது. இது அயல்நாட்டு பிரச்னை என்றால், ஈழ பிரச்னைக்குத் தீர்வு காண திம்பு மாநாட்டை ஏன் நடத்தவேண்டும்? ராஜீவ் காந்தி, இலங்கை அரசின் ஒப்புதலில்லாமலே, வடமாராச்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை ஹெலிகாப்டர் மூலம் வழங்கவில்லையா? அதை அன்றைய அதிபர் ஜெயவர்தன கண்டிக்கவில்லையா?

இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியா ஏன் கையொப்பமிட வேண்டும்? இலங்கைக்கு இந்தியா, அமைதிப் படையை எப்படி அனுப்பியது? முள்ளிவாய்க்கால் பிரச்னையில் இந்திய ராணுவத்தை ஏன் அனுப்பியது? முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்தியா நிதியுதவி செய்தது ஏன்? இப்போது மட்டும் அயல்நாட்டு பிரச்னை என்பது வேடிக்கையாக இருக்கிறது. இப்போது இந்தியா குரல் கொடுக்காமல் மௌனம் சாதிப்பது நியாயமா?

இலங்கையால், சீனாவின் ஆதிக்கம் இந்தியப் பெருங்கடலில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மாலத்தீவுடன் இந்தியாவிற்கு இருந்த நட்பில் விரிசல் ஏற்பட்டது. இருந்தும் மாலத்தீவின் புதிய அதிபர் இப்ராகிம் சோலி தன்னுடைய பதவியேற்பு விழாவிற்கு இந்தியப் பிரதமர் மோடியை அழைத்துள்ளார்.

மாலத்தீவின் புதிய அதிபருடைய அணுகுமுறை எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. கடந்த நவம்பர் 5—ஆம் தேதி, அமெரிக்கா பொருளாதாரத் தடைக்கு உள்ளாகியிருந்த இந்தியா, சீனா, இத்தாலி, கிரீஸ், ஜப்பான், தென்கொரியா, தைவான், துருக்கி ஆகிய நாடுகளுக்கு விளக்கமளித்தது.

இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் வழங்கும் ஈராக், சவூதி அரேபியா ஆகிய நாடுகளை அடுத்த மூன்றாவது நாடான இரானில் அமெரிக்க பரிந்துரையோடு சபஹார் துறைமுகம் கட்ட இந்தியா முதலீடு செய்துள்ளது. இதை சீனா விரும்பவில்லை.

இலங்கையில் நடக்கும் அரசியல் குழப்பத்தால், இலங்கை வழியாக இந்தியாவை மிரட்டக்கூடிய பணிகளை சீனா ஆரம்பித்துள்ளது. எவ்வளவுதான் இந்தியா இலங்கைக்கு உதவி செய்தாலும், இலங்கை நன்றி பாராட்டுவதே இல்லை.

இலங்கையில் பண்டாரநாயக பிரதமராக இருந்தபோது, ஜேவிபி புரட்சியால் உள்நாட்டு கலவரம் மூண்டபோது, இந்தியா சிங்கள அரசுக்கு உதவியது. இதே காலகட்டத்தில் வங்க தேசம் உதயமானபோது நடந்த போரின்போது, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி வேண்டிக்கொண்டதை மீறி, பாகிஸ்தான் விமானங்களுக்கு எண்ணெயை நிரப்பி கிழக்கு வங்கப் போருக்கு அனுப்பியது பண்டாரநாயக அரசு. 300 மில்லியன் டாலர் மதிப்பீட்டில் 40,000 வீடுகள் கட்டும் ஒப்பந்தம், சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதை நிறுத்தி இந்திய நிறுவனத்திற்கு வழங்க பரிந்துரை செய்தார் பிரதமர் ரணில். இது சீனாவிற்கு ஆத்திரமூட்டியது. அதிபர் சிறீசேனாவும் சீனாவிற்கு ஆதரவாகவே செயல்பட்டார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முற்றம் இந்தியாவிற்கு சிறீசேனாவால் மறுக்கப்பட்டது.




ஆனால், 2017—ஆம் ஆண்டு, ஹம்பன்தோட்டா துறைமுகத்தை, சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியது. திரிகோணமலை துறைமுகம், எண்ணெய் பாதுகாப்புப் கழகப் பிரச்னை, கெரவலபிடிய எல்என்ஜி மின்சார உற்பத்தி, பலாலி, மாத்தளை விமான நிலையம் போன்ற பிரச்னைகளில் சீனா மூக்கை நுழைத்தது. இலங்கை அரசு உறுதியளித்தும், இந்த திட்டங்களை செயல்படுத்த இந்தியா சிக்கலை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் இரண்டு முக்கியமான பகுதிகளை ராஜபட்ச பதவியேற்றவுடன் சீனாவுக்கு வழங்க சிறீசேனாவும் ராஜபட்சவும் ரகசியமாகத் திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டும் தற்போது எழுந்துள்ளது. இது உண்மையானால் மிகவும் அபாயகரமானது. இந்திய அரசு இதை கவனிக்க வேண்டாமா?


இதையெல்லாம் கவனத்தில் கொண்டு இலங்கை பிரச்னயில் கடமையாற்ற வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது. அங்கு வாழும் தமிழர்கள் இந்தியாவை நேசிப்பவர்கள். இந்துக்களும் இந்து கோயில்களும் அழிக்கப்படுகின்றனர் என்பதை கவனத்தில் கொண்டாவது பாஜக அரசு கடமையாற்ற வேண்டாமா?

ராஜபட்சவுடன் முள்ளிவாய்க்கால் போரை நடத்திய மைத்ரிபால சிறீசேனாவை, நல்லவர் என்று நம்பி, ராஜபட்ச ஆட்சிக்கு வரக்கூடாது என்று சிறீசேனாவுக்கு வாக்களித்த தமிழர்களுக்கு நன்றி பாராட்டாமல், மீண்டும் ராஜபட்சவுக்கே அவர் மகுடம் சூட்டியதை வரலாறு மன்னிக்காது.

நரியிடம் நாட்டாமை கிடைத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்குமாம் என்ற கிராமத்து பழமொழியை நினைவூட்டும் விதமாக கேலிக்கூத்துக்களை நிகழ்த்தி வரும் சிறீசேனா, மக்களவையின் மாண்புகளைக் காக்கும் மனிதராக இருந்தாக வேண்டும் எனபதுதான் உலகநாடுகளின் கோரிக்கையாக அவர் முன் வைக்கப்படுகிறது. அதில் அவர் தவறுவாரானால், உலக நாடுகளின் முன் ஒரு கொடுங்கோல் சர்வாதிகயென குற்றவாளிக் கூண்டில் அவர் ஏற்றப்பட வேண்டும்!

# கருத்துப் ப(ா)டம்



# சொல்றாங்க... சொல்றாங்க...



"தமிழகத்தில் ரிமோட் ஆட்சிதான் நடக்கிறது!"

சந்திரபாபு நாயுடு

(ஆமாங்க... அந்த ரிமோட்டை ஆப் பண்றதுக்காகத்தான் மக்கள் அதைத் தேடறாங்க. ரிமோட் கண்ணுல அகப்பட மாட்டேங்குது!)



"என்னை ஏன் சிம்ப்ளிசிட்டி என்று சொல்கிறார்கள் எனத் தெரியவில்லை!"

ரஜினிகாந்த்

(இது மட்டுமா தெரியலே, மக்கள் இன்னும் என்னென்னவோ உங்களைப் பத்தி சொல்றாங்க... அதுவும் உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லைதான்! )



"முதல்வராக இருப்பவர்களுக்கு மக்கள் நிலையை பார்த்து இதயம் துடித்துடித்திருக்க வேண்டாமா? புயல் பாதிப்பை பார்வையிட செல்லாத முதல்வருக்கு இருப்பது இதயமா, இரும்பா?

ஸ்டாலின்

(பளிச்சின்னு கேட்டீங்க செயலு! ஈழத்தில் இலட்சக்கணக்கான தமிழர்கள் மடிஞ்சப்போ உங்க அப்பா துடிக்காம, அண்ணனுக்கு சீட்டு வாங்க டெல்லி ஓடினப்போ இதைக் கேட்கலையே நீங்க? அப்போ உங்க இதயம்? )



"ஈழத் தமிழ் மக்களுக்கு இதுவரை என்ன உதவிகள் செய்துவிட்ட நினைப்பில் எங்கள் ஆதரவைக் கோருகிறீர்கள்? ஆதரவளித்தால் மீண்டும் கெடுதல் செய்ய மாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?"

(ராஜபக்சேவிடம் கேள்வி எழுப்பிய இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன்

(நீங்க கேட்ட ஒவ்வொரு வார்த்தையும் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனும் அந்த ஆளுகிட்ட கேட்கும் கேள்விதான்! நல்லா கொடுத்தீங்கய்யா!)



# பிரியாத வரம்

## வரைவு பிரெக்ஸிட் ஒப்பந்தம்

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதற்காக எட்டப்பட்டுள்ள வரைவு ஒப்பந்தத்துக்கு மனசாட்சியோடு ஆதரிக்க முடியாது என்று கூறி பிரெக்ஸிட் செயலாளர் டொமினிக் ராப் பதவி விலகியுள்ளார். அதைப்போலவே வேலை மற்றும் ஒய்வூதியச் செயலாளர் எஸ்தர் மெக்வே—வும் பதவி விலகியுள்ளார்.




இதனிடையே, ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் பிரிட்டனுக்கும் இடையே வரைவு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ள நிலையிலும் இறுதித் தீர்வுக்கு இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டும் என்று கூறியுள்ளார் ஐரோப்பிய ஒன்றியத்தின் முதன்மை பேச்சுவார்த்தையாளர் மைக்கேல் பார்னியர்.





பிரெக்ஸிட் வரைவு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ள சூழலில் பிரிட்டன் பிரதமர் தெரீசா மே நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கடுமையான கேள்விகளை எதிர்கொண்டுள்ளார்.

பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வரைவறிக்கைக்கு எதிராக பேசியதாக தெரிகிறது. இருந்த போதிலும் ஐந்து மணி நேர விவாதத்திற்கு பிறகு இந்த வரைவறிக்கையை உறுதிப்படுத்தினார் தெரீசா மே.

நம்பிக்கை இல்லா வாக்கெடுப்பு நகர்வுக்கு மத்தியில், தெரீசா மே சார்ந்துள்ள ஜனநாயக யூனியனிஸ்ட் கட்சி ஆதரவாளர்கள், பழமைவாத கட்சியை சேர்ந்த பிரெக்ஸிட் ஆதரவாளர்களும் இந்த வரைவறிக்கைக்கு எதிராக உள்ளனர். லேபர் கட்சி இந்த வரைவை ஆதரிக்கிறதா, இல்லையா என பின்னர் அறிவிக்கும்.

அதேநேரம், இந்த 585 பக்க வரைவறிக்கை தேச நலனை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டதாக தெரியவில்லை என தொழிலாளர் கட்சியின்



# வேண்டும்

தலைவர் கோபின் கூறி உள்ளார்.

ஹவுஸ் ஆஃப் காமன்ஸிற்கு ஐக்கிய ராஜ்ஜியம் முன்புள்ள வாய்ப்புகள் குறித்து பேசினார் தெரீசா.

நம் வேலை வாய்ப்புகளை பாதுகாக்கும், நம் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், நம் பணத்தின் மீதான, சட்டம் மற்றும் எல்லை மீதான அதிகாரத்தை அளிக்கும் இந்த ஒப்பந்தமானது வாக்கெடுப்பிற்கு பின்பே முடிவானது. இந்த ஒப்பந்ததை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது பிரெக்ஸிட் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற தொனியில் தெரீசா மே பேசி உள்ளார்.

அதே வேளையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக பிரக்ஸிட் தொடர்பான பேச்சுவார்த்தையில் தலைமை வகிக்கும் மிக்கேல் பார்னியர் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான வரைவு ஒப்பந்தம் உறுதியான முன்னேற்றம் கண்டுள்ளதாக கூறுகிறார்.

பிரக்ஸிட் வேண்டுமென்று கேட்டவர்கள் இந்த வரைவறிக்கையை தீர்க்கமாக எதிர்க்க காரணம் என்ன?

தற்காலிகமாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், ஐக்கிய ராஜ்ஜியத்திற்குமான ஒற்றை சுங்கப் பகுதியை இந்த வரைவறிக்கை முன் வைக்கிறது.

இந்த காரணமாக ஐரோப்பிய சட்டத்திலிருந்து ஐக்கிய ராஜ்ஜியம் விடுபட பல ஆண்டுகளாகும் என அஞ்சுகிறார்கள். இதன் காரணமாகவே எதிர்க்கிறார்கள்.




கேபினட் ராஜிநாமா செய்யும் என்ற அச்சுறுத்தல் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதால், தெரீசா மே சவாலை சந்திப்பார்.

லேபர் கட்சியின் தலைவர் கோபின், ஜனநாயக யூனியனிஸ்ட் கட்சியின் தலைவர் ஆலின், ஸ்காட்லாண்ட் முதலமைச்சர் நிகோலா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## பிரெக்ஸிட் என்றால் என்ன?




பிரிட்டனில் நடக்கும் விஷயங்களை புரிந்து கொள்ள வேண்டுமென்றால், பிரெக்ஸிட்டை புரிந்து கொள்ள வேண்டும்.

பிரிட்டன் வெளியேறுதல் என்று பொருள். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான விஷயமாதலால், இப்பதம் பயன்படுத்தப்படுகிறது.

பொருளாதார மற்றும் அரசியல் ஒத்துழைப்புக்காக இரண்டாம் உலகப் போருக்கு பின் ஏற்படுத்தப்பட்டதுதான் ஐரோப்பிய ஒன்றியம். இந்த ஒன்றியத்தில் ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, க்ரோஷியா, சிப்ரஸ், செக் குடியரசு, டென்மார்க், ஃபின்லாந்து, ஃப்ரான்ஸ், க்ரீஸ், ஜெர்மனி, ஹங்கேரி, ஐயர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், ஸ்வீடன், பிரிட்டன் உள்ளிட்ட 28 நாடுகள் இருந்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கென்று, `ஈரோ' என்ற தனி பணம் உள்ளது. இதனை 19 நாடுகள் பயன்படுத்துகின்றன. இதற்கென்று நாடாளுமன்றமும் உள்ளது.

ஏன் ஐரோப்பியா ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுகிறது?

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறே வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததற்கு முதன்மையான காரணம் குடியேற்றம்தான். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்த பலநாடுகள் குடியேற்ற விஷயத்தில் தாராளவாதபோக்குடன் நடந்து கொண்டது. பல நாடுகளிலிருந்து வருவோர் பிரிட்டனில் குடியேறுவது காரணமாக, தங்கள் நாட்டின் கலாசாரம், பொருளாதாரம் மோசமடைவதாக பிரிட்டன் மக்கள் கருத தொடங்கினர். இந்த எண்ணமானது இது தொடர்பாக ஒரு வாக்கெடுப்புக்கு வித்திட்டது. 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் தேதி நடந்த அந்த வாக்கெடுப்பில் 71.8 % பேர் கலந்து கொண்டனர். 51.9 % மக்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.




ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பான வாக்கெடுப்பில் பெரும்பாலான வர்கள் அந்த ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்வதற்கு இசைவாக வாக்களித்தனர். தனிப்பட்ட இரு நபர்களின் உறவுகள் சுமூகமாக பிரிந்து செல்வதிலேயே ஏராளமான சிக்கல்கள் இருக்கும் இப்போதைய சூழலில் வணிகம், ராஜாங்கம் என நெருக்கமான தொடர்பு உள்ள ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து நினைத்த உடனே எல்லாம் வெளியேறிவிட முடியாது. அதனால், சுமூகமாக பல உடன்படிக்கைகளை மேற்கொண்டுவிட்டு, ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுகிறது. அதற்கான காலக்கெடு 2019. அதாவது, மார்ச் 29, 2019 அன்று இரவு பிரிட்டன் நேரப்படி 11 மணிக்கு ஒன்றியத்திலிருந்து வெளியேறுகிறது பிரிட்டன்.

போரிஸ் ஜான்சன் பிரிட்டனின் வெளியுறவுத் துறை செயலாளர். பிரெக்ஸிட்டிற்கு ஆதரவாக தீவிரமாக பிரசாரம் செய்தவர். ஐரோப்பிய ஒன்றியத்திலிந்து வெளியேறுவது தொடர்பான பேச்சுவார்த்தையில் பிரதானமாக இருந்தவர். அவர் பிரெக்ஸிட் தொடர்பாக காத்திரமான முடிவுகளை பிரிட்டன் பிரதமர் தெரீசா மே எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி, பிரெக்ஸிட் கனவை மே தெரீசா சிதைப்பதாக கூறி தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

## இன்னொரு 'பிரெக்ஸிட்' வாக்கெடுப்பை நோக்கி நகர்கிறதா பிரிட்டன்?

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேற இன்னும் ஒரு சில மாதங்களே இருக்கும் நிலையில், எந்த ஒப்பந்த அடிப்படையில் பிரிட்டன் விலகும் என்பதில் தெளிவில்லாமல்




இருக்கிறது. விலகுவது என்ற முடிவுக்கு ஆதரவாக பிரிட்டனில் 2016—ல் ஏற்பட்ட கருத்தொற்றுமை முடிவை அமல்படுத்த முடியுமா என்பதும் நிச்சயமில்லாமல் இருக்கிறது. பிரதமர் தெரசா மே தலைமையிலான அரசே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அதற்கும் முன்னால் சந்தித்துவிடும் என்று தோன்றுகிறது.

தெரசாவின் கன்சர்வேடிவ் (டோரி) கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பலர், ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டனின் எதிர்கால உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதில் வெவ்வேறு கருத்துகளுடன் உள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பிற 27 நாடுகளிடமிருந்து விலகிவிட்டால் எதிர்காலத்தில் அந்த நாடுகளுடனான விவகாரங்களில் கொள்கைகளை வகுப்பதில் தங்களுக்குப் பழைய செல்வாக்கு இருக்காது என்பதை இப்போது அதிகமாக உணரத் தொடங்கியுள்ளனர். இதனாலேயே பிரிட்டிஷ் அமைச்சரவையிலிருந்து கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களே ஒவ்வொருவராகப் பதவி விலகிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், பிரெக்ஸிட் முடிவுக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் ஒப்புதலை வாங்குவது எளிதல்ல.

ஐரோப்பிய நாடுகளை எப்போதும் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் கன்சர்வேடிவ் கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட தெரசா மேவின் விலகல் உத்தியைச் சந்தேகத்துடனேயே பார்க்கின்றனர். தெரசா மேவை இன்னமும் ஆதரிக்கும் இதர அமைச்சர்கள்கூட, விலகல் உத்தியில் மாற்றங்கள் அவசியம் என்றே கருதுகின்றனர். வடக்கு அயர்லாந்து, அயர்லாந்து குடியரசு இடையே இணக்கமான எல்லை நிலவ வேண்டும் என்று கருதுவோர்கூட தெரசா மே மேற்கொள்ள விரும்பும் ஏற்பாடுகள், ஐரோப்பிய நாடுகளிடம் பேரம்பேசி சாதகமாக வர்த்தக உடன்பாடுகளைச் செய்துகொள்ளப் போதாது என்று கருதுகின்றனர்.



கன்சர்வேடிவ் கட்சியில் தலைமைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கே விரைவில் பொதுத் தேர்தல் வரக்கூடும். தேர்தலில் தெரசா மே தோற்றால், இந்தக் குழப்பம் மேலும் அதிகமாகிவிடும். பிரிட்டனை விலகியதாகவும் கருத முடியாமல் விலகாமல் தொடர்வதாகவும் அணுக முடியாமல் ஐரோப்பிய ஒன்றியத்துக்குக் குழப்பம் ஏற்படும். அப்படியொரு குழப்ப நிலை வராமல் தடுப்பது இரு தரப்புக்குமே நல்லது என்று ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் பிரிட்டனுக்கும் தெரியும். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து மார்ச் 29—ல் விலகுவது என்ற முடிவைத் தள்ளிவைப்பதே சிறந்தது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகள் விரும்பும். ஆனால், அந்தக் கோரிக்கை பிரிட்டனிடமிருந்து வர வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகலாமா என்று மீண்டும் ஒரு முறை பிரிட்டிஷ் மக்களிடம் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கருத்தை முன்னாள் பிரதமர் ஜான் மேஜர் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். பிரிட்டன் இன்னொரு வாக்கெடுப்பை நோக்கிச் சென்றாலும் வியப்பதற்கு ஏதுமில்லை.



## மத நல்லிணக்கம் காப்போம்!

சுவாமி விவேகானந்தர், பாரதத்தின் உயிர் நாடி ஆன்மிகம். சாந்தியையும் சமாதானத்தையும் எடுத்துக்கூறத் தகுதியுடைய நாடு பாரதம் மட்டுமே. பாரதம் அழிந்தால் சாந்தியும் சமாதானமும் இன்றி உலகு அழியும் என்றார். உலகின் மிகப்பெரிய மதங்களான கிறித்துவம்—இஸ்லாம் இடையே எழுந்த ஒன்பது சிலுவைப் போர்களால் (கி.பி. 711—1492) லட்சக்கணக்கான மக்கள் இரு தரப்பிலும் மாண்டனர்.

கிறித்துவத்தில் உள்ள புராட்டஸ்டன்ட்— கத்தோலிக்கப் பிரிவினர்க்கிடையே 30 ஆண்டுகள் (கி.பி. 1618—1648) நடைபெற்ற போரில் இரு தரப்பிலும் லட்சத்திற்கும் அதிகமான வீரர்கள் கொல்லப்பட்டனர். ஜெர்மனியில் மட்டும் 2000 அரண்மனைகள் 1800 கிராமங்கள், 1500 நகரங்கள் கொள்ளையிடப்பட்டன.

ஜெர்மானிய மக்கள்தொகையில் 30 சதவீதம் பேரும், செக்கோஸ்லாவியா நாட்டு மக்கள்தொகையில் 33 சதவீதம் பேரும் மரணத்தை தழுவினர். கிறித்துவம், தொல் சமயமான யூத மதத்தை கொத்து கொத்தாக அழித்தது.


இத்தாலி, ஆஸ்திரியா, ஸ்பெயின், ஹங்கேரி, போலந்து, டென்மார்க், நார்வே, ஸ்வீடன் பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகள் பேரழிவை சந்தித்தன.




நம் நாட்டில் இது போன்ற மதவழிப் போர்கள் நடைபெற்றதில்லை. காரணம், தாய் சமயமான இந்து சமயம் பெரும்பான்மை சமயமாக இருந்ததுதான். நம் முன்னோர் உலகையே ஒரு குடும்பமாக உருவகப் படுத்தினார்கள்.

புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றன் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றார். நம் நாட்டில் பெரும்பான்மையோர் இந்து சமயத்தினர் என்பதால், அச்சமயத்தினரின் வாக்குகளைப் பெறும் கட்சி ஆட்சிக் கட்டிலில் அமர்கிறது.

மத வழி சிறுபான்மைப் பிரிவினர்க்கு கல்வியில், பணியில், பதவி உயர்வில் இன்ன பிறவற்றில் சலுகைகள் வழங்குவதற்கு என்றே அமைச்சகம் உருவாக்கப்படுகிறது. எல்லா அரசியல் கட்சிகளுமே சிறுபான்மை மக்களின் நலனில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன.





நம் நாட்டில் ஒவ்வொருவருக்கும் மத சுதந்திரம் இருப்பதால் சில மதப் பிரசாரகர்கள் அதனைத் தவறாக பயன்படுத்துகிறார்கள். தங்களது மதம் பரவ வேண்டும் என்பதற்காக, தங்களின் மதக் கூட்டங்களில், பிற சமய நம்பிக்கைகளை, கோயில்களை, கோயில் நகரங்களை, திருமடங்களை ஏளனம் செய்கின்றனர். இதனால் மத ஒற்றுமை வளராது. மாறாக, வெறுப்பும் கசப்புமே பல்கி



பெருகும்.

டி.எஸ். தியாகராசன்

ஒரு நாட்டின் தொல் விழுமியங்களை எல்லாரும் போற்ற வேண்டும். இதுநாள் வரை முன்னோர்கள் கட்டிக் காத்த மரபுகளை நாம் அழிக்கலாகாது. மேலைநாட்டு விஞ்ஞானிகள் எல்லாம் நம் நாட்டு மெய்ஞ்ஞானத்தை ஆய்வு செய்யும் இந்நாளில், புற சமயப் பரப்புரையாளர்கள் தாய் நாட்டு புராணங்களை, இதிகாசங்களை, இலக்கியங்களை, தெய்வங்களை, மரபுவழி நடைமுறைகளைப் பரிகசித்தல் முறையன்று.




பல ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்க மதத் தலைவர் போப் மும்பையில் கூறினார். முதல் ஆயிரம் ஆண்டுகளில் ஐரோப்பாவை கிறித்துவ மதமாக்கினோம். இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளில் ஆப்பிரிக்காவை மதம் மாற்றினோம். இப்போது மூன்றாவது ஆயிரம் ஆண்டுகளில் ஆசியா முழுவையும் கிறித்துவ மதமாக்க வேண்டும். இதற்கு நாம் எல்லாரும் சேர்ந்து ஊழியம் செய்ய வேண்டும். இந்நாட்டின் மதச் சடங்குகளை நம் மதத்திற்குள் கொண்டு வரலாம் என்றார்.

இதனால்தான் சர்ச்சுகளில் குத்து விளக்கு ஏற்றுவது, கொடி மரம் நடுவது, தேர் பவனி நடத்துவது, துவராடை அணிவது, நேர்த்திக் கடன் செலுத்துவது, பாத யாத்திரை போவது போன்ற தாய் மத சம்பிரதாயங்களைப் பின்பற்றுகிறார்கள்.

நம் நாட்டு கிறித்துவர்கள் இன்றும் ஒரு படி மேலே போய், அவர்களின் ஜெபப்




பாடல்களை கர்நாடக இசையில் இசைக்கிறார்கள். தாய் சமய தெய்வ திருவுருவங்களை அவர்தம் பாணிக்கு ஏற்ப மாற்றவும் முனைகிறார்கள். முன்னைச் சுவடுகளை அழித்து அவர்தம் மதத்தடங்களை அமைக்கின்றனர்.

பிறவா யாக்கைப் பெரியோன் என்று சிலப்பதிகாரத்தில் போற்றப்படும் சிவனைப் பெற்றவர் யாரும் இல்லை. ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனை மத கண்டனத்திற்கு உட்படுத்தல் சரியன்று. உலகெங்கிலும் மதமாற்றப் பணியில் முன் நிற்பவர்கள் கிறித்துவ மதப் பிரசாரகர்களே.

இவர்களின் பிரசாரம் தேசப்பிதாவைக் கூட விட்டு வைக்கவில்லை. ஒருமுறை பட்லர் என்ற கிறித்துவர் காந்தியிடம் உபமானங்கள் என்ற நூலைத் தந்து படித்து விட்டுக் கருத்து கூறுங்கள் என்றார். காந்தியார் படித்து முடித்து விட்டு, கடவுளின் ஒரே அவதாரம் ஏசுவே. கடவுளிடம் மனிதரைச் சேர்க்க வல்லவர் அவர் ஒருவரே

என்பதை நிரூபிக்க கூறப்பட்டிருந்த வாதங்கள் என் மனதை கவரவில்லை என்றார் (நூல்: சத்திய சோதனை).

தென்னாப்பிரிக்காவில் காந்தியிடம் கிறித்துவ மதப் பிரசாரகர் ஒருவர், எங்கள் மதத்தின் மேன்மையை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் செய்து விட்ட பாவங்கள் குறித்து வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் வருந்திக் கொண்டு இருப்பது நீங்கள் சொல்லுவதில் இருந்து தெரிகிறது. உங்களுக்கு மன சாந்தியே இராது. எங்கள் மத நம்பிக்கை பரிபூர்ணமானது. பாவத்தின் சுமையை நாம் எவ்விதம் தொடர்ந்து தாங்க முடியும்? அப்பளுவை நாம் ஏசு கிறிஸ்து மீது போட்டு விடத்தான் முடியும். அவரை நம்புகிறவரே நித்தியமான வாழ்வை அடைவார் என்றார்.

காந்தி அந்தச் சகோதரர் சொன்னதற்கு ஏற்பவே அவருடைய செயலும் இருந்தது. அறிந்தே பல தவறுகளை அவர் செய்தார். அந்தத் தவறுகள் அவரை கவலைபடுத்தவில்லை என்பதை அவர் காட்டி விட்டார் என்று கூறினார் (நூல்: சத்திய சோதனை).

இதுபோன்றே சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் உரையாற்றும்போது, நாங்கள் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ளோம். இம்மாநாட்டில் தினசரி கர்த்தரை ஏற்றுக் கொள்பவனே செழிப்பான் எனத் திரும்பத் திரும்பக் கூறுகிறீர்கள். அவ்வாறு செழிப்படைந்த இங்கிலாந்து நாட்டை நாங்கள் கூர்ந்து நோக்குகிறோம். நீங்கள் அடைந்துள்ள செல்வம் கர்த்தரால் வழங்கப்பட்டது அல்ல. அவை 25 கோடி ஆசிய மக்களின் குரல்வளையை நெரித்துப் பெற்ற செழிப்பே என்பது எங்களுக்குத் தெரியும்.

கிறித்துவ ஐரோப்பாவின் செல்வம், மேற்கிந்திய தீவுகளையும் மெக்ஸிகோ நாட்டின் பூர்வகுடி மக்களையும் கொள்ளையடித்ததால் பெறப்பட்ட செல்வம் என்பதும் சரித்திர பூர்வமாக எங்களுக்குத் தெரியும் என்று முழங்கினார்.

ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட சமயப் பூசல், போர், பஞ்சம், பசி, நோய் இவற்றின் காரணமாக கடல் கடந்து அமெரிக்க நிலப்பரப்பை அடைந்தார்கள் ஐரோப்பிய கிறித்தவர்கள். அமெரிக்க சிவப்பிந்தியர்கள் இவர்களை வரவேற்று உபசரித்து, தங்க இடமும், உண்ண உணவும், குளிரிலிருந்து தப்பிக்க கம்பளி ஆடைகளையும் வழங்கினர். இதனை டேனியல் சி.சாண்டர்ஸ் என்ற அறிஞர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.




அதுவரை சிவப்பிந்தியர்கள் அறிந்திராத மதுவைத் தந்து, அவர்களை மதம் மாற்றி அவர்களது பண்டை நாகரிகங்களை, கிரேக்க, ரோமானிய கலாசாரங்களை அழித்ததுபோல அழித்து விட்டனர். எதிர்த்தவர்கள் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாயினர். சுவாமி விவேகானந்தரும் அமெரிக்கா சென்றார். அந்நாட்டு மக்களின் மனதை வென்றார். எப்படி? அவர்களிடத்து மந்திர, தந்திர உத்திகளைக் காட்டியோ, அற்புதங்கள் நிகழ்த்தியோ அல்ல. அவர்களின் உண்மையான ஆன்மிக, ஞானத் தேடலுக்கு தொல்சமய மெய்ஞ் ஞானத்தை வழங்கினார். இதனால், கற்றறிந்த மக்கள் அவரைத் தங்களின் அவதார புருஷராக ஏற்றுக் கொண்டனர்.

பாரத மெய்ஞ்ஞானம் விஞ்ஞானத்தை உள்ளடக்கியது என்பது மிகையல்ல. 1642—இல் உலகம் உருண்டை என்று சொன்ன மேலை நாட்டு விஞ்ஞானிக்கு கிறித்துவ மதத்தலைமை கடுந்தண்டனை வழங்கியது. பாரத நாட்டு விஞ் ஞானி கி.பி. 499—லேயே பூமி உருண்டையானது, அது தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது. அதற்கான கால அளவு 23:58:04 மணித்துளிகள். பூமி சூரியனை சுற்றி வர 365 நாள் ஆகிறது என்று கூறினார்.

பாஸ்கல் விதியையும், ஆர்க்கமிடீஸ் தத்துவத்தையும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கண்டுணர்ந்தவர்கள். உடல் உறுப்பு சிகிச்சைகளை வரலாற்றுக் காலத்திற்கு முன்பே நடைமுறைப் படுத்தியவர்கள் இந்நாட்டுத் தவ சீலர்கள்.

விண்ணியல், மண்ணியல், சித்திரவியல், சிற்பவியல், கட்டடவியல், நீரியல், உழவியல் கடல் கடந்த வணிகவியல் போன்ற துறைகளில் மட்டுமல்லாது பூஜ்யத்தையும் கண்டவர்கள்.

இதனால்தான் இந்நாட்டின் தொன்மை சமயத்தை லியோ டால்ஸ்டாய், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஹஸ்டன் ஸ்மித், பெட்ரன்ட் ரஸல், பெர்னார்ட் ஷா போன்ற உலகின் தலைசிறந்த அறிஞர்கள் போற்றி மகிழ்ந்தனர்.

ஆனால், மதம் மாற்றுவதையே குறிக்கோளாக கொண்ட மதப் பிரசாரர்கள் தொல் சமயத்தை மதிக்க மறந்து மனித நேயம் வளர்க்கத் தவறுகிறார்கள். மனம் போனபடி மாற்றுச் சமயங்களை இகழவும் செய்கிறார்கள். இனியாவது தொல் சமயத்தை மதிப்போம்; மத நல்லிணக்கம் காப்போம்.

# தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

## indian express foods

### இட்லி / தோசை மா

## இலண்டனில் மட்டுமே கிடைக்கும்



indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

# இனி ஒரு விதி

## மீளுமா யேமன்?

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் துருக்கி கடற்கரையில் உயிரிழந்து கிடந்த சிரியா நாட்டைச் சேர்ந்த இரண்டு வயதுச் சிறுவன் ஆலன் குர்தியின் புகைப்படம் உலகையே உலுக்கியது. அகதிகள் குடியுரிமை தொடர்பான ஐரோப்பிய நாடுகளின் கொள்கை முடிவுகளே மாறக் காரணமாக இருந்தது அந்தப் புகைப்படம்.

அதேபோல,யேமன் நாட்டைச்சேர்ந்த ஏழு வயதுச் சிறுமி அமல் ஹுசைனின் எலும்பும் தோலுமான புகைப்படம் "நியூயார்க் டைம்ஸ்' நாளிதழில்



கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியான பின்தான் யேமனில் நடக்கும் கொடுமையின் தீவிரத்தை உலகம் சற்று உணரத் தொடங்கியது.




சிறுமி அமல் ஹுசைன் மட்டுமல்ல, யேமனில் சுமார் நான்கு லட்சம் சிறார்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப்போர், இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோரை பலிகொண்டு, லட்சக்கணக்கானோரை உள்நாட்டிலேயே அகதிகளாக்கி தொடர்ந்து வருகிறது.


மருத்துவர்கள், ஆசிரியர்கள் உள்பட அரசு ஊழியர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊதியம் வழங்கப்படவில்லை. "இந்தச் சண்டை நிறுத்தப்படாவிட்டால், இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய பஞ்சத்தை யேமன் சந்திக்கும்' என எச்சரித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் அண்டோனியோ குட்டெரஸ்.

அரபு உலகின் ஏழ்மையான நாடான யேமனின் மக்கள்தொகை 2.8 கோடி. சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட அதிபர் அப்த்—ரப்பு மன்சூர் ஹாதி தலைமையிலான அரசை, 2014—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஹௌதி எனும் கிளர்ச்சிப் படையினர் கவிழ்த்து, தலைநகர் சனா உள்பட நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றினர்.




ஈரானின் ஆயுத உதவியுடன் செயல்படுவதாகக் கூறப்படும் இந்த ஹௌதி கிளர்ச்சிப் படைக்கு எதிராகவும், அதிபர் ஹாதி தலைமையிலான அரசை மீண்டும் பதவியில் அமர்த்தும் நோக்குடனும், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் தலைமையிலான கூட்டணி அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆதரவுடன் யேமனில் புகுந்தது.

தம் அண்டை நாடான யேமனில் ஈரானின் கை ஓங்குவதை விரும்பாததுதான் சவூதியின் தலையீட்டுக்குக் காரணம். யேமன் சண்டை மூலம்





சவூதி தலைமையிலான கூட்டுப் படைகளுக்கு ஆயுத விற்பனை செய்யலாம் என்பதுதான் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலையீட்டுக்குக் காரணம்.

யேமனின் பிரச்னைகள் தீர ஒரே வழி, அங்கு நடைபெறும் சண்டை நின்றுபோவதுதான். இதற்கு சர்வதேச நாடுகள் ஆதரவு தெரிவித்தாலும், பல்வேறு முரண்பாடுகளால் அத்தீர்வு எட்டப்படுவதில் தொடர்ந்து தாமதம் ஏற்படுகிறது. யேமனில் அமைதி நிலவ வேண்டும் எனக் கூறும் அமெரிக்காவும், பிரிட்டனும் சவூதியின் வான்வழித் தாக்குதலுக்கு உதவி செய்கின்றன. சவூதியின் போர் விமானங்களுக்கு நடுவானில் எரிபொருள் நிரப்பும்

## எஸ். ராஜாராம்

உதவியை இந்த இரு நாடுகளும்தான் செய்கின்றன. அந்த உதவியை நிறுத்தினால், சவூதியின் விமானத் தாக்குதலாவது முடிவுக்கு வரும்.


அதாவது, "நாளைமுதல் தாக்குதல் நிறுத்தப்படும்' என அமெரிக்காவும், பிரிட்டனும் சொன்னால் அதை கேட்பதைத் தவிர சவூதிக்கு வேறு வழி கிடையாது. ஆனால், சவூதியுடனான பாதுகாப்பு ஒப்பந்தங்கள், ஆயுத விற்பனை காரணமாக அமெரிக்காவும், பிரிட்டனும் அதற்கு முன்வருவதில்லை.

இந்த ஒத்துழைப்பின்மை காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிக்கு போதிய வெற்றி கிடைப்பதில்லை. யேமன் சண்டை நிறுத்தம் தொடர்பாக ஜெனீவாவில் கடந்த செப்டம்பர் மாதம் ஐநா சபை ஏற்பாட்டில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில்



உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. விளைநிலங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், விம்லன நிலையம், துறைமுகம் என எல்லா இடங்களிலும் வான்வழித் தாக்குதல் நடத்தப்படுவதால் நாட்டின் உள்கட்டமைப்பே சிதைந்து போய் உள்ளது.

கடுமையான பண வீக்கம் காரணமாக கிடைக்கும் உணவுப் பொருளையும் விலை கொடுத்து வாங்க இயலாத சூழல். உணவுப் பஞ்சம் காரணமாக,




முடிவடைந்தது.

நவம்பர் மாதம் மீண்டும் பேச்சு நடைபெறும் என யேமனுக்கான ஐநா தூதர் மார்ட்டின் தெரிவித்திருந்த நிலையில், அதில் உள்ள பல சவால்கள் காரணமாக, பேச்சுவார்த்தை இந்த ஆண்டு இறுதிக்கு தள்ளிப்போகும் எனத் தெரிவித்துள்ளார். யேமனின் சண்டைநிறுத்த தீர்வுக்கு இது பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

யேமன் மக்களின் முக்கிய உணவு கோதுமை. அந்நாட்டின் மொத்த நுகர்வில் வெறும் ஐந்து சதவீதமே அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மீதி 95 சதவீதத்திற்கு இறக்குமதியையே நம்பியுள்ளது. ஆனால், தற்போது நடந்துவரும் சண்டையால் கோதுமை இறக்குமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டு




ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டு ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் ஒரு குழந்தை இறந்துபோவதாக ஐநா சபை தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோகி துருக்கியில் உள்ள சவூதி தூதரகத்தில் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், சவூதிக்கு எதிராக உலக நாடுகள் கடுமையான எதிர்வினை ஆற்றின. “சவூதி இதற்கு பதில் சொல்லியே தீர வேண்டும்‘ என அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் கடுமை காட்டினார்.

அதே சவூதியால் யேமனில் தினம் தினம் பச்சிளம் குழந்தைகள் செத்து மடியும் விஷயத்தில் உலக நாடுகள் பெரிதாக எதிர்வினை ஆற்றவில்லை என்பதுதான் நிதர்சனம்.


யேமன் தற்போது எதிர்கொண்டிருக்கும் பஞ்சம் மனிதர்களால் உருவாக்கப்பட்டது. அதிலிருந்து மிச்சமிருக்கும் மக்களை மீட்க வேண்டியதும் அதே மனிதர்கள்தான்.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.



*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு


editor@ithamil.com



# ஓங்கும்

*தீவிர வலதுசாரி நாடாகும் பிரேசில்*

பிரேசிலின் புதிய அதிபராக 2019 தொடக்கத்தில் பதவியேற்கிறார் ஜெய்ர் பொல்சொனாரோ. ஒரு ஜனநாயக நாட்டில் பதவிக்கு வந்த வலதுசாரிகளிலேயே இவர்தான் அதிதீவிரமானவராக இப்போதைக்குக் கருதப்படுகிறார். பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, ஹங்கேரியைப் பின்பற்றி பிரேசிலிய மக்களும் வலதுசாரித் தலைவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.







பொல்சொனாரோவை, ‘பிரேசிலின் டிரம்ப்’ என்றே அழைக்கின்றனர். இதில் உண்மையும் இருக்கிறது. அமெரிக்க அதிபர் டிரம்ப், பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ துதார்தேவைப் போல இவரும், சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க வன்முறைதான் கை கொடுக்கும் என்று நம்புகிறார். அதிபர் தேர்தல் முடிவு வெளியான உடனேயே பிரேசில் நாட்டு ராணுவம் நகர வீதிகளில் மிடுக்கோடு அணிவகுப்பு நடத்தியது. மக்கள் கூடி நின்று ராணுவ வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். அவர்களும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். பொல்சொனாரோ ராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். பிரேசிலில் 1964 முதல் 1985 வரையில் நடந்த ராணுவ சர்வாதிகார ஆட்சியைப் புகழ்ந்து பேசியிருக்கிறார். அந்த ஆட்சியால்தான் உலக அரசியல் அரங்கில் பிரேசில் முதல் வரிசையில் இடம்பிடித்தது என்று கூறியிருக்கிறார். பொல்சொனாரோ அதிபராக மூன்று ‘பி’க்கள் காரணம், அவை முறையே பீஃப், பைபிள், புல்லட் என்கின்றனர்.


100 கோடி ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவுள்ள அமேசான் மழைக்காட்டை யாரும் எளிதில் நுழைய முடியாதபடிக்கு சுற்றுச்சூழல், தொழிலாளர்

# சர்வாதிகாரம்

கனகமணி தீட்சித்

சட்ட விதிகள் தடுக்கின்றன. “நான் அதிபரானால் இந்தத் தடைகளைத் தகர்த்து, பொருளாதார வளர்ச்சி விரைவுபட காடுகளைப் பயன்படுத்த அனுமதிப்பேன்” என்று பொல்சொனாரோ வாக்குறுதி தந்தார். காடுகளில் விவசாயம் செய்யலாம், கால்நடைகளையும்



கோழி—வாத்து உள்ளிட்ட பறவைகளையும் வளர்க்கலாம், கனிம வளங்களை அகழ்ந்தெடுக்கலாம், மின்சாரம் தயாரிக்க வனங்களில் அணைகளைக் கட்டலாம், மரங்களைத் துண்டுகளாக்கி விற்கலாம் என்று அடுத்து அனுமதிக்கப்போகிறார். இதனால் இத்துறையைச் சேர்ந்தவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாடுகளை, “பிரேசிலின் இறையாண்மை மீது ஐக்கிய நாடுகள் சபை திணித்த நிபந்தனைகள்” என்று பிரச்சாரத்தின்போது வர்ணித்தார் பொல்சொனாரோ. அவருடைய உத்தேச யோசனைகள், இறையாண்மையை பிரேசிலியர்களுக்கு மீட்டுத் தந்துவிடப்போவதில்லை; கனடா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியர்களின் வணிக விருப்பங்களைத்தான் அவை பூர்த்திசெய்யப்போகின்றன.

பிரேசிலில் ‘கத்தோலிக்க சமத்துவம்’ என்று அழைக்கப்படும் ‘விடுதலை இறையியல்’ கோட்பாடு இப்போது செல்வாக்கிழந்துவருகிறது. மாறாக, பிரேசிலின் ஏழை மக்களிடையே பெந்தகொஸ்தேவுக்கு ஆதரவு அதிகம். அமெரிக்க




உந்துதலால், நற்செய்திப் பிரசங்கங்கள் வளர்ந்தன. பிரேசிலின் மிகப் பெரிய பேராலயங்களில் ஒன்றான ‘யுனிவர்சல் சர்ச் ஆஃப் தி கிங்டம் ஆஃப் காட்’ உலகம் முழுக்க ஒரு கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறது. அதன் தலைவர் எடிர் மாசிடோ பிரேசிலின் இரண்டாவது மிகப் பெரிய தொலைக்காட்சி வலையமைப்பை (ரெகார்ட்டிவி) வைத்திருக்கிறார். இந்த இயக்கங்கள் மக்களிடையே மிகவும் செல்வாக்குள்ளவை. கருக்கலைப்பு, பாலினச் சமத்துவம் ஆகியவற்றை இவற்றின் ஆதரவாளர்கள் ஏற்பதில்லை. சுவிசேஷப் பிரசங்க அமைப்புகளும் கத்தோலிக்கக் குழுக்களும் பொல்சொனாரோவை ஆதரிக்கின்றன.


புல்லட் என்பது ராணுவத்தை மட்டுமல்ல; காவல் துறையையும் குறிப்பது. இரண்டு அமைப்புகளுமே அவரைத் தங்களுடைய நலனைக் காக்கக்கூடியவராகப் பார்க்கின்றன. நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதால் வெகுண்டுள்ள மத்தியதர வர்க்கமும் அவரை ஆதரிக்கின்றன. 2017—ல் 175 பேர் வன்செயல் களுக்குப் பலியாகியுள்ளனர். குற்றம் செய்யும் ஏழைகளை, காவல் துறை கடுமையாக ஒடுக்க வேண்டும் என்றே பேசியிருக்கிறார்.

அவர் இப்படிக் கூறியதற்கு இனவெறியும்






காரணம். வன்செயல்களால் யார் மிகவும்




பாதிக்கப் படுகின்றனரோ அவர்களையே அதற்குக் காரணமாகக் கருதுகிறார். மத்தியதர வர்க்கத்தினரின் விருப்பு — வெறுப்புகளே அவருடைய பிரச்சாரத்தின் மூலங்களாக இருந்துள்ளன. அவருடைய ஆட்சியையும் அவைதான் தீர்மானிக்கப்போகின்றன.

சாவ் பாவ்லோ நகரில் உள்ள பிரேசிலின் பங்குச் சந்தையை 'பி—3' என்றே அழைக்கின்றனர். அதன் அடிப்படை பங்குக் குறியீட்டுப் பெயர் 'போவஸ்பா'. அதில் 60 பெரிய நிறுவனங்களின் பங்குகள் இடம்பெற்றுள்ளன. பொல்சொனாராவின் வெற்றிக்குப் பிறகு இந்தப் பங்குகளின் விலை மதிப்பு கிர்ரென்று உயர்ந்தது. தங்களுடைய வேட்பாளர்தான் வெற்றிபெறுவார் என்பதை இப்பணக்காரர்கள் முன்னதாகவே உணர்ந்துள்ளனர்.

கனிம நிறுவனங்கள், மின்உற்பத்தி நிறுவனங்களின் கூட்ட அரங்குகளில் மது வெள்ளமாகப் பாய்ந்தது. தேசிய வேளாண்மைக் கூட்டமைப்பு அலுவலகமும் இதற்கு விதிவிலக்கல்ல. அரசியல் விமர்சகர்கள் தங்களுடைய கட்டுரைகளில் 'காரியசாத்தியமான', 'நியாயமான' என்றெல்லாம் அவருடைய வெற்றியை வர்ணிக்கத் தொடங்கிவிட்டனர். வறுமையில் விழுந்துகொண்டிருக்கும் லட்சக்கணக்கான பிரேசிலியர்களைவிட, தொழிலதிபர்கள் மீது அவருடைய கவனக்குவிப்பு இருக்கும் என்று இதற்குப் பொருள்.

அமெரிக்க முன்னாள் வெளியுறவுத்துறை அதிகாரி அன்னா ப்ரூசா நேரடியாகவே, 'பிரேசிலின் கனிமத் துறையில் முதலீடு செய்ய இது உகந்த நேரம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். சந்தைகளைத் திறந்துவிட வேண்டும் என்பதை ஆதரிக்கும்

பொல்சொனாரோ, கட்டுப்பாடுகளை வெகுவாகக் குறைத்துவிடுவார் என்று அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அமெரிக்க அதிபர் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற உதவிய ஸ்டீவ் பன்னான், 'சமூக ஊடகப் பிரச்சாரத்தை பொல்சொனாரோ வலுவாக நடத்தியுள்ளார்' என்று பாராட்டினார்.




அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தொழிலாளர் கட்சியினர், குழந்தைகளுக்குப் பாலியல் பற்றிச் சொல்லித்தருகின்றனர் என்று பொய்ச் செய்தியை சமூக ஊடகங்களில் பரவவிட்டதைத்தான் அப்படி மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரேசிலிலும் ஒரு வலதுசாரித் தலைவர் அதிபராகிவிட்டார் என்றதும் டிரம்ப் வெற்றிக் களிப்பில் மிதந்தார். தொலைபேசியில் அவருடன் பேசினார். 'பிரிக்ஸ்' அமைப்பு நிலைகுலைந்துவிட்டதால் பிரேசில் அதிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது அதன் நடைமுறைகளில் அதிக வேகம் காட்டக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அமெரிக்காவுக்குக் கீழ்ப்படிந்த நாடாக பிரேசில் இனி திகழும். இதைத்தான் பிரேசில் தொழில்துறை விரும்புகிறது, அமெரிக்காவும் எதிர்பார்க்கிறது. அமெரிக்காவிடம் பிரேசில் நெருங்குவது லத்தீன்—அமெரிக்க நாடுகளில் சுதந்திரமான பிராந்திய நடைமுறை சீர்குலையவே வழிவகுக்கும். உலகின் பல துருவ அமைப்புக்கும் பேரிழப்பாகிவிடும்

# வானுயர்ந்த சிலை

### உயரச் சிலை; உயர்ந்ததா நிலை?

அமெரிக்காவின் புகழ்பெற்ற சுதந்திர தேவியின் சிலையைவிட அளவில் பெரிய சிலையை, சர்தார் வல்லபபாய் படேலுக்கு, சர்தார் சரோவர் அணைக்கட்டின் அருகே திறந்துள்ளது மத்திய அரசு. இதை ஒரு சாதனையாக அவரைச் சார்ந்தவர்கள் அறிவித்துக் கொள்கின்றனர்.







அமெரிக்காவின் சிலையை விஞ்சுவது முக்கியமா? அல்லது அமெரிக்காவின் நிலையை விஞ்சுவது முக்கியமா என்ற விமர்சகர்களின் வினாக் கணைகள் தவிர்க்க முடியாதவை. நமது ரூபாய் மதிப்பைவிட, அமெரிக்க டாலர் மதிப்பு 74 மடங்கு அதிகமாக உள்ளது. விடுதலை அடைந்த இந்தியாவில் ஒரு டாலருக்கு நிகர் ஒரு ரூபாய்தான்.

சிலைகளை உயரமாக அமைப்பது செம்மாந்தத் திறமாகுமோ என்ற கேள்வி ஒருபுறம் உறங்கட்டும். தேசப்பிதா காந்தி பிறந்த மாநிலத்தில் காந்திக்கே இல்லாத அளவுக்கு, காந்தியாரின் உண்மைத் தொண்டருக்கு, இவ்வளவு பெரிய சிலை வைப்பதன் பின்னணி அரசியலும் விவாதத்திற்குரியது.

அதேநேரத்தில், ஒரு பேராளுமையை கௌரவிக்க வேண்டும் என்பது அவர் தனது வாழ்வில் அடியொற்றி நடந்த விழுமியங்களுக்கு விரோதமில்லாத வகையில் அமைய வேண்டும். மகாத்மா காந்தியின் புகழை மது விருந்தால் கொண்டாட முடியுமா? புத்தபிரானின் புகழைப் போர் வெற்றியால் போற்ற முடியுமா? முஹம்மது நபிகளின் புகழை மூடத்தனங்களால் முழங்க




# வயிறுகாய்ந்த நிலை

## ஜெ. ஹாஜாகனி

முடியுமா? ஏசுபிரானின் புகழை எளியோரை வஞ்சித்துக் கொண்டாட முடியுமா? அவ்வாறு செய்ததைப் போன்றாகி விட்டது வல்லபபாய் படேலுக்கு வைக்கப்பட்ட மூவாயிரம் கோடி செலவிடப்பட்ட சிலையின் நிலையும்.

1918—ஆம் ஆண்டில் விவசாயிகள் மீது பிரிட்டிஷ் அரசு விதித்த கடுமையான நிலவரியைத் தள்ளுபடி செய்ய, வல்லபபாய் படேல் நடத்திய மாபெரும் போராட்டம், அண்ணல் காந்தியின் கவனத்தை அவர்பால் ஈர்த்தது.






இந்திய சுதந்திரப் போரில் படேல் காந்தியடிகளோடு கரம் கோத்துக் களமிறங்கினார். “பாரிஸ்டர்' பட்டம் பெற்றவர் என்றாலும் எளிமையையே தனது இயல்பாக்கிக் கொண்டார். “வேளாண் பண்பாடே நமது பண்பாடு' (“அவர் கல்ச்சர் ஈஸ் அக்ரிகல்ச்சர்') என்பது அவரது புகழ்பெற்ற வாசகம்.

“எனக்கு ஒரே ஆசைதான். அது, விடுதலை அடைந்த இந்தியா உற்பத்தியில் முதலிடம் வகிக்க வேண்டும். இங்கு யாரும் பஞ்சத்தால் பசித்திருக்கக் கூடாது. உணவில்லாமல்

யாரும் ஒரு துளி கண்ணீரும் வடிக்கக் கூடாது' என்று வல்லபபாய் படேல் கூறினார்.

சிலையடிவாரத்தில் கட்டப்பட்டுள்ள நட்சத்திர விடுதி, பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின்




பயன்பாட்டைக் கருத்திற்கொண்டு அதி சொகுசு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதாம். பன்னாட்டு சுற்றுலாப் பயணியர்க்கு பட்டுக்கம்பளம் விரிப்பதுதான், இவர்களுக்குப் படேல் கற்றுத்தந்த பாடமா?

வல்லபபாய் படேலும் ஜவாஹர்லால் நேருவும் காந்தியின் இரு கரங்களாய்த் திகழ்ந்தவர்கள். இரு கரங்களுமே இருவேறு தன்மை கொண்டவைதான்.

வல்லபபாய் படேல் வலுவான வலதுசாரிப் பார்வை உடையவர் என்றால், ஜவாஹர்லால் நேருவோ இம்மியும் பிசகாத இடதுசாரித்தன்மை கொண்டவர்.

வல்லபபாய் படேலின் வலதுசாரி வன்மையோ, நேருவின் இடதுசாரித் தன்மையோ காந்தியம் கிழித்தக் கோட்டைக் கடைசி வரைத் தாண்டாமல், கட்டுப்பட்டு நின்றிருந்தது நமது கவனத்திற்குரியது.




சுதந்திர இந்தியாவில், காந்தியின் நினைவுச் சின்னங்களைவிட, தனக்கு உயரமான நினைவுச் சின்னம் அமைய வேண்டும் என்று வல்லபபாய் படேல் கடுகளவும் விரும்பியிருக்க மாட்டார். படேலின் மண்ணில் அவர் பெயரால் நடக்கும் இந்த அலங்கோலத்தை காணும் வாய்ப்பு அவருக்கிருந்திருந்தால், தனது கொள்கையைக் கொலைசெய்த கொடுமையை மன்னித்திருக்கவே மாட்டார்.

இந்தியாவில் விவசாயிகளின் நிலை எத்தகைய அவலத்தில் உள்ளது என்பதை ஆட்சியாளர்கள் அறிந்திருக்கவில்லையா? 2015—ஆம் ஆண்டில் மட்டும் 12,602 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதாக “என்சிஆர்பி’ என்னும் “தேசியக் குற்றப்பதிவு ஆணையம்‘ புள்ளிவிவரம் தந்துள்ளது. 2014—ஐ விட 2015—இல் 42 விழுக்காடு விவசாயிகள் தற்கொலை கூடி இருப்பதாகவும், விவசாயத்தால் ஏற்பட்ட கடன் சுமையே இதற்குக் காரணம் என்றும் இவ்வாணையம் குறிப்பிட்டுள்ளது.

தமிழக விவசாயிகள், தலைநகர் தில்லியில் நூறு நாள்களுக்கும் மேலாகத் தங்கி, நாளுமொரு நூதனப்போராட்டம் நடத்தி, பிரதமரின் கடைக்கண் பார்வைத் தங்கள்மீது விழும் என்று எதிர்பார்த்தனர். கடைசி வரை அவர்களுக்கு தரிசனம் தராமல் தட்டிக்கழித்தார் நமது பிரதமர்.

ரஷியத் தலைவர் லெனினை சந்திக்க, வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவர் வந்தாராம். அவரது அலுவலகத்தில், முக்கியப் பிரமுகரோடு அதிபர் லெனின் உரையாடிக் கொண்டிருக்கிறார் என்று கூறி காத்திருக்கச் சொன்னார்களாம். நீண்ட


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
2019
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Happy
New Year!

நேரம் காத்திருந்த அந்த வெளிநாட்டுப் பிரமுகர், தன்னைவிட முக்கியமான அந்தப் பிரமுகர் யாரென அறிய ஆர்வம் கொண்டிருக்கிறார். வெளியில் வந்த அவரை விசாரித்தபோது, அவர் ஒரு விவசாயி என்பது தெரிந்திருக்கிறது.

வெளிநாட்டுப் பிரமுகரை விட, உள்நாட்டு உழவருடன், வேளாண்மை வளர்ச்சி குறித்து பேசுவது முக்கியம் என்று லெனின் நினைத்திருக்கிறார். திரிபுராவில் லெனின் சிலையை அடியோடு தகர்த்தவர்கள் அவ்வாறு சிந்திப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

விவசாயிகள் வேதனையின் உச்சத்தில்... சிறு வியாபாரிகளின் வாழ்வோ சித்திரவதைப் படலத்தில்... தொழிலாளர் வர்க்கத்துக்கோ தொடர்ச்சியான நெருக்கடிகள் என தேசத்தின் பிரச்னைகள் நீண்டிருக்க, உயரச் சிலையே தமது உன்னத சாதனை என்று எண்ணி மகிழ்வதை என்னென்று சொல்வது?

ஒரு குடியரசு தினத்தன்று, உத்தரப் பிரதேச அரசு மருத்துவமனையில் 75 குழந்தைகள், ஆக்சிஜன் உருளைப் பற்றாக்குறையால் பரிதாபமாக இறந்தன.

ஆக்சிஜன் உருளை நிறுவனத்திற்கு அம்மாநில அரசு, அதிகமான கடன் பாக்கி வைத்ததால், அந்நிறுவனம் விநியோகத்தை நிறுத்தியது. இதனால், ஏதுமறியா இளம்பிஞ்சுகள் உயிரிழந்தன.

இந்தியாவின் இரும்பு மனிதருக்கு, சீன இரும்பில் சிலை செய்ய சுமார் மூவாயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதி, பொதுத்துறை நிறுவனங்கள், சமூக நலனுக்காக ஒதுக்கும் "கார்ப்பரேட் சோஷியோ ரெஸ்பான்ஸிபிலிடி' ("சிஎஸ்ஆர்') என்ற நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சிலையை நிறுவ, "இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்' 900 கோடி, "ஒஎன்ஜிசி' 500 கோடி, "பாரத் பெட்ரோலியம்' 250 கோடி, "ஆயில் இந்தியா கார்ப்பரேஷன்' 250 கோடி, "கேஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா' 250 கோடி, "பவர் கிரிட்' 125 கோடி, "குஜராத் மினரல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' 100 கோடி, "எஞ்சினியர்ஸ் இந்தியா' 50 கோடி, "பெட்ரோனெட் இந்தியா' 50 கோடி ரூபாய் நிதி வழங்கிய செய்தி சமூக ஊடகங்களில் வலம் வருகின்றன.




நலத் திட்டங்களுக்கான, பொதுத்துறை நிறுவன நிதிகளை சிலைத் திட்டத்திற்கு மடைமாற்றியது நியாயமாகுமா?

எரிபொருள்களின் விலை விண்ணைத்தொடும் வேளையில், "குறையுங்கள் எரிபொருள் விலையை' என்ற மக்களின் கூக்குரலைக் கொஞ்சமும் கருதாமல், பொதுத்துறை நிறுவன லாப நிதிகளை நாட்டு மக்கள் நலனுக்குப் பயன்படுத்தாமல், இரும்புச் சிலைக்கும், நட்சத்திர விடுதிக்கும் செலவிடுவது மக்களாட்சிக்கு மகத்துவம் சேர்க்குமா?

படேல் சிலைக்கு "ஒருமைப்பாட்டுச் சிலை' என்று பொருள்படும் "ஸ்டேட்யூ ஆஃப் யூனிட்டி' என்று பெயரிட்டு, அதன் காலடியில் இருக்கும் கல்வெட்டில், "ஸ்டேட்டுக்கே ஒப்பி யூனிட்டி' என்று எழுதி, தமிழைச் சிறுமைப்படுத்தலாமா?

பாகிஸ்தான் வங்க மொழியைச் சிறுமைப்படுத்தியதன் விளைவாக, பங்களாதேஷ் என்ற புதிய நாடு உதயமானது. அதற்கு மருத்துவச்சியாக இருந்து பிரசவம் பார்த்தது நமது நாடு.

பிரிவுபடாத பாகிஸ்தானில் இருந்த மக்களின் மொழியுணர்வை மதித்த தேசம், தனது மாநில மக்களின் மொழியுணர்வை சிலையடிவாரத்தில் சிறுமை செய்வது எவ்வகையில் நியாயம்? வல்லமை மிக்க நடுவணரசுக்கு சொல்லின் பொருளை சரிபார்க்கக் கூடவா இயலாமல் போனது?

'கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்

உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி' என்கிறது குறள்.

கொடை குணமும், அருள் மனமும், செங்கோன்மையும், தளர்ந்த குடிகளைத் தாங்குவதும், ஆகிய நாற்பண்புகள் இருக்கும் ஆட்சியாளன் ஒளி விளக்கு போன்றவன் என்கிறார் வள்ளுவர்.

சிலைகளும், சின்னங்களும் மட்டுமே செங்கோன்மையின் அளவுகோல்கள் அல்ல. அறநெறியும், மக்களின் மகிழ்வான வாழ்த்துமே நல்லரசின் அளவுகோல்கள்.

பரந்த உலகில் பறந்து திரியும் நமது பிரதமரிடம், "உயரச் சிலையை திறக்கும் திருப்பணியை விட, மக்களின் துயர நிலையை துறக்கும் அறப்பணிகளே அரசின் முதற்கடன்' என்று எடுத்துரைப்போர் எவரும் அருகில் இல்லையா?

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து செயல்படவேண்டிய நேரம் இது!

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™

# யாருமற்ற மாலை பொழுது

காற்றின் கதவுகள் தந்த
மீதம் காற்று
குளிர்ந்த உடலைத் தழுவியபடி,
நினைவுகளை கலைத்துக் கொண்டிருந்தது
எதனையும் இப்போது சிந்திக்க
சாத்தியப்படவில்லை
அவ்வளவு சன்னமாக பக்கத்துவீட்டு
தொலைபேசி உறுமுவது காதுகளில் ஒலிக்கிறது
ரசனையான கவிதை தான் குறுஞ்செய்தியில்
படிக்கத் தோன்றவில்லை
இவ்வுலகில் நான் மட்டும் தனித்திருப்பதாக
கடந்து போகிறேன்
மௌனத்தைத் தவிர துணையாய் விட்டுச் சென்ற
உன் காதல் அருகில் இல்லாமலும் இல்லை
நெடிதாகி வரும் மின்னல்
காதுகளை வருடியபடி லேசான இடி
சன்னல் படபடக்கும் அதிர்வலைகளில்
வந்து வீழும் சாரலில் ஒரு துளி
கன்னங்களை வருட,
போதுமானதாய் இருக்கிறது
இந்த சுகம்
இந்த நொடி
களையத் தோன்றவேயில்லை...

ஆனந்தி ராமகிருஷ்ணன்




# மனிதன் அணிவித்த முகமூடி

இறக்கும் தருணமறிந்து
பிறந்திருப்போமேயானால்
இருக்கும் தருணங்களில்
இயல்பு மாறாமல்
இருந்திருப்போம்
மனிதனாய்!
கடவுளின் பிம்பங்கள்
அழகானது
அரக்கனின் பிம்பங்கள்
அகோரமானது
மனிதன் அணிவித்த
முகமூடியில்!
உதிர்ந்த இறகுகள்
ஒருபோதும்
உறைய வைப்பதில்லை
உயரே பறக்கும் பறவையை!
ஆலயங்களில்
தேடுவதை விட
அனாதை இல்லங்களில்
தேடுங்கள் மலடி
பட்டங்களுக்கான தீர்வை!
வானை அளந்தோம்
கடல் மீனை அளந்தோம்
கோளை அறிந்தோம்
நிலவின் கோலமறிந்தோம்!
ஏவுகணை அறிந்தோம்
ஏவும் விதம் அறிந்தோம்
வரும் புயலும் அறிந்தோம்!
வறுமைக்கோட்டை
தகர்த்தெறியும் அஸ்திரமும்
வயற்காட்டை வறட்சியாக்காத
ஆயுதமும் என்று அறிவோம்?

மு.கௌந்தி

# அவர்கள் தென்படுகிறார்கள் !

அவர்கள் தென்படுகிறார்கள்!
ஆழ்கிணற்றில் விழுந்து கிடக்கும் கல்லென
ஆழ்மனதில் விழுந்துக் கிடப்பவர்கள்
அதிசய சேது சமுத்திரக் கல்லென
அவ்வப்போது
அவர்கள் தென்படுகிறார்கள்

நுண்ணிய ஓசை
நுண்ணிய சலனம்
நொடிப்பொழுதில் முகம் காட்டி
தெற்றென ஏதோவொன்றில்
அவர்கள் தென்படுகிறார்கள்

விளக்க முடியாத நிலையில் நின்று
விளங்கப்படுத்துகிறார்கள் எதையோ!
விளங்கப்படுத்தியவர்களைப் பற்றி
விளக்கப் போனால்
விளையாட்டாகிறது!
விவாதப் பொருளாகிறது!
வினையாகவுமாகிறது!

முன்னால் சென்றவர்கள்
பின்னாலும் வருகிறார்கள்
தென்படுவது அவர்கள் விரும்பும்போதா?
தென்படுவது அவர்களது தேவைக்காக?
தென்படுவதே நமது தேவைக்கா?
தெரிவு அவர்கள் வசம்!!

சிறுவன் கை பந்துபோல
பிரபஞ்ச வெளிவாசிகளின் பார்வையில்
பூமிப்பந்தும் ஒரு பூப்பந்தோ?
தென்படுகிறவர்களிடம்
கேட்க நினைப்பது
கேட்காமல் மறந்து போகிறது

பேசுகிறார்கள்...
பேச வேண்டியதைப் பேசுகிறார்களா
பேச வேண்டுமென்று பேசுகிறார்களா?
பேசவியலாதவர்களாக இருந்தாலும்
பேசுகிறார்கள்! —அவர்கள்
பேசும்பொழுது பதில் தரவியலா
பேசா மடந்தையாகிட நேரிடுகிறது

வார்த்தைகளை மட்டுமல்ல
மொழியையும்
தேர்ந்தெடுத்து பேசுகிறார்கள்
காற்றின் ஓசை...
பறவையின் குரல்...
எங்கோ ஒலிக்கும்
எதையும்



தேவை இல்லையென்று
தேவையானதைக்கூட
தேட முடியாத இடத்தைத்
தேடிச் சென்றவர்களுக்கு
தேவை என்ன இருக்கிறது
தேடி வந்து பேசுவதற்கு?

எல்லாம் முடிந்து போன பிறகும்
ஏதோ ஒன்று தொடர்பில் இருக்கிறது
எது என்று சொல்லத் தெரியவில்லை
அவர்களுக்கும்...
எனக்கும்...

அவர்கள் தென்படுகிறார்கள்!

**கொற்றவன்**

# மீண்டும் காக்கிக்கு திரும்பும் கார்த்தி!

‘தீரன் அதிகாரம் ஒன்று’ படத்தைத் தொடர்ந்து பிரபுதேவா இயக்கத்தில் ‘கறுப்பு ராஜா வெள்ளை ராஜா’ மற்றும் பாண்டிராஜ் இயக்கும் படம் ஆகியவற்றில் நடித்துவரும் கார்த்தி, மீண்டும் ‘மாநகரம்‘ படத்தின் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் உடன் இணைகிறார். ‘மாநகரம்‘ படத்தின் தொழில்நுட்ப கலைஞர்களே இதிலும் பணிபுரியவுள்ளார்கள். மீண்டும் விறுவிறு கார்த்தி காவல்துறை சாகசம் காட்டவிருப்பதாக செய்திகள் வருகின்றன.



காக்கியை களங்கப்படுத்தாமல் இருந்தால் சரி!



பல்லவி வெற்றிகரமாய் ஒலிக்கட்டும்!

## வெற்றிக்கான பல்லவி!

பாலாஜி மோகன் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் வெளியான ‘மாரி’ படம் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், அதன் இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பு தீவிரமாக நடக்கிறது. காஜல் அகர்வாலுக்குப் பதிலாக சாய் பல்லவி ஹீரோயினாக நடிக்கிறார். இப்படத்தில் ‘அராத்து ஆனந்தி’ என்ற ஆட்டோ ஓட்டும் பெண்ணாக சாய் பல்லவி நடிக்கிறார். அத்துடன் சூர்யா நடிக்கும் ஒரு புதிய படத்திலும் நடித்துவரும் சாய் பல்லவி, சூர்யாவின் தீவிர ரசிகை என்பதால் அவர் ஏக சந்தோஷத்தில் இருக்கிறார். அவரது தமிழ் பிரவேசத்தை ஏக குஷியுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள் பிரேமம் டீச்சர் ரசிகர்கள்!

ஷங்கர் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினி நடித்துள்ள ‘2.ஓ’ திரைப்படம் முழுவதும் ரசிகர்களிடம் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது. இப்படத்தில் ரஜினி, விஞ்ஞானி மற்றும் ரோபோ ஆகிய இரண்டு வேடத்தில் நடித்திருக்கிறார். வில்லனாக அக்ஷயக்குமார், ரஜினிக்கு ஜோடியாக ஏமி ஜாக்சன் நடித்துள்ளனர். தமிழ், தெலுங்கு மற்றும் இந்தியில் ஒரே நேரத்தில் வெளியாகிறது. 600 கோடி செலவில் லைகா நிறுவனம் இந்த படத்தை பிரம்மாண்டமாக தயாரித்துள்ளது. இப்படம் வெளியாவதற்கு முன்பே 120 கோடி வசூலிப்பது இதுவே முதல் முறை. இந்த படத்தின் வியாபாரம் 1000 கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் படத்தின் தமிழக தியேட்டர் உரிமை ரூ.120 கோடிக்கு விற்பனையாகியதாக தகவல்கள் வெளியாகின்றன.



## டராபைட் வேகத்தில் பறக்கும்!!

## பட்டிதொட்டி எங்கும் கலக்கும் ‘சிட்டி’!



## றெக்கை கட்டும் ரெபா!


## பறந்து பறந்து நடிக்கட்டும்!

கேரளத்தில் இருந்து தமிழுக்கு வந்து இறங்கியிருக்கும் ரெபா மோனிகா ‘ஜருகண்டி’ மூலம் தனக்கான இடத்தை உறுதிபடுத்திக் கொண்டிருக்கிறார். நிறைய விளம்பரப் படங்களில் நடித்திருந்தாலும், ‘ஜருகண்டி’ அவருக்கு மேலும் புதிய படங்களைக் கொண்டு வந்திருக்கிறது. தற்போது, நானியுடன் ஒரு தெலுங்குப் படம், `நானும் ரவுடிதான்’ படத்தின் கன்னட ரீமேக், தமிழில் கயல் சந்திரனின் `டாவு’ ஆகிய படங்கள் எனத் தென்னக மொழிகளில் வலம் வருகிறார் ரெபா!

# மங்காத தமிழென்று

*நம் பிள்ளைகள் சோனியாக இருப்பது தேசிய அவமானம் இல்லையா?*

உலகப் பட்டினி அட்டவணையில் இடம்பெற்றுள்ள 119 நாடுகளில், 103—வது இடத்தில் இருக்கிறது இந்தியா. மிக வேகமாக வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நம் நாட்டில் பட்டினியால் வாடுவோரின் எண்ணிக்கை, நிலப்பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நம் நாட்டுப் பட்டினியை 'தீவிரம்' என்று வகைப்படுத்தியுள்ளனர்.







நாட்டின் தலைநகரமான டெல்லியில் சாப்பிட உணவே கிடைக்காமல் பசியாலேயே 3 சிறுமிகள் ஜூலை மாதம் இறந்தனர். நாட்டிலேயே நபர்வாரி வருவாய் அதிகமுள்ள நகரம் டெல்லி. இதை எப்படிப் புரிந்துகொள்வது?

ஊட்டச்சத்துக் குறைவால் ரத்தசோகை, உடல் வளர்ச்சிக் குறைவு, வயதுக்கேற்ற எடை, உயரம் இல்லாமை என்று இந்தியச் சிறார்கள் இருப்பது உலகிலேயே இந்தியாவில்தான் இப்போது அதிகம். 'தேசியக் குடும்ப சுகாதார ஆய்வு—2016' தரும் தகவல்கள் அதிர்ச்சிதருவன. ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளில் வயதுக்கேற்ற உயரம் இல்லாதோரின் சராசரி உலக அளவில் 22.9%. ஆனால், இந்தியாவில் 38.4%. வயதுக்கேற்ற எடை இல்லாத சராசரி உலக அளவில் 13.5%, ஆனால், இந்தியாவில் 35.7%. இந்தியாவில் தங்களுடைய வயதுக்கேற்ற உயரம் இல்லாத குழந்தைகள் 5.33 கோடி, எடையில்லாத குழந்தைகள் 4.96 கோடி, உயரத்துக்கேற்ற எடை இல்லாத சோனி குழந்தைகள் 2.92 கோடி.

*தலைகீழ் வளர்ச்சி*

சங்கே

# முழங்கு!


சைலேந்தர் குமார் ஹூடா, ரபியுல் அன்சாரி

நாடும் மாநிலங்களும் வளம் அடைந்தாலும் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவு நிலை பெரும்பாலும் மாறவேயில்லை. பொருளாதாரம் வேகமாக வளர்ந்தும் வருவாய் பெருகியும் மனித வளம் ஆரோக்கியமாக இல்லையென்றால் அதனால் அரசுக்குத்தான் இழப்பு. லட்சக்கணக்கான குழந்தைகள் நோஞ்சானாகவும் நோய்க்கு ஆளாகுபவர்களாகவும் இருந்தால் அவர்களால் நன்கு படிக்கவோ, முழு உற்பத்தித் திறனை வெளிப்படுத்தவோ முடியாது. இது நாட்டின் வளர்ச்சியிலும் எதிர்காலத்தில் எதிரொலிக்கும்.

வளர்ச்சி சார்ந்த முன்னேற்றம் தொடர்பான நடப்பு சிந்தனைதான் பிரச்சினைகளுக்குக் காரணம். ‘குறைந்த வருவாயுள்ள—அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைக் குழுக்களைக் கொண்டுள்ள மாநிலங்கள்’தான் (இஏஜி) ஏழைக் குழந்தைகளின் ஊட்டச்சத்தை அதிகப்படுத்துவதில் பொதுவாக சவால்களைச் சந்தித்துவருகின்றன. ஆனால் சத்தீஸ்கர், ஒடிஷா போன்ற பின்தங்கிய மாநிலங்கள், நபர்வாரி வருவாயில் தங்களைப் போல இரண்டு மடங்குள்ள குஜராத், மகாராஷ்டிரத்தைவிடச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன.





தொழில் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், தொழில் முதலீடு ஆகியவற்றில் அக்கறை காட்டும் குஜராத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்தை அதிகப்படுத்த அவர்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் வெற்றியை எட்ட



முடியவில்லை. குஜராத்துடன் ஒப்பிடும்போது வருவாய் குறைந்த ஒடிஷா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி சேவைகள் (ஐசிடிஎஸ்) மூலம் சாதனை படைத்துள்ளது.

பொது சுகாதார வசதியை அளித்தும், ஒரு லட்சம் பேருக்கு அதிக எண்ணிக்கையில் ஆசிரியர்கள், சுகாதார ஊழியர்களை நியமித்தும், மகளிரின் கல்வியறிவை மேம்படுத்தியும் இதைச் சாதித்துள்ளது. பழங்குடிகள், கிராமப்புறத்தவர், ஏழைகள், கல்வியறிவே இல்லாதவர்களின் குழந்தைகள் ஹரியாணா, குஜராத், பஞ்சாப் மாநிலங்களில் மிக மோசமாகவே இருக்கின்றனர். இப்பிரிவுக் குழந்தைகள் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பிஹார், ஜார்க்கண்ட் மாநிலங்களிலும்




இப்படித்தான் சத்துக் குறைவாக இருக்கின்றனர். இந்தியாவின் வளர்ந்த, வளரும் மாநிலங்களின் 200 மாவட்டங்களில் இப்படி உயரம் குறைந்த, எடை குறைந்த, சோனியான குழந்தைகள் அதிகம் இருக்கின்றனர்.

வேளாண்மையுடன் ஊட்டச்சத்தை இணைப்பது அவசியம். ஊட்டச்சத்துக் குறைவு பிரச்சினைகளுக்கு வேளாண்மைதான் பதில் அளிக்க முடியும். ஹரியாணா போன்ற வேளாண் உபரி மாநிலத்தில் ஊட்டச்சத்துக் குறைவாக இருப்பது முரண் நகை. ஹரியாணாவில்தான் குழந்தைகளில் 34% உயரம் குறைவாகவும் 29.5% எடை குறைவாகவும் உள்ளனர். கர்னால், பானிப்பட், சோனிப்பட், ரோடக், குருகிராம் ஆகிய வேளாண்மையில் முன்னேறிய மாவட்டங்களில் இது ஒடிஷாவைவிட அதிகம்!




வேளாண் வளர்ச்சியில் மத்திய பிரதேசம் சமீபத்தில் இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டி இந்தியாவின் உணவுக் களஞ்சியமாகியிருக்கிறது. ஆனால், ஊட்டச்சத்துக் குறைவுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அந்த மாநிலத்தில்தான் அதிகமாக இருக்கிறது. வயதுக்கேற்ற எடையில்லாதவர்கள் 42.8%, உயரமில்லாதவர்கள் 41.9%.

வேளாண்மையில் வளர்ச்சி இருந்தும் குழந்தைகள் ஏன் ஊட்டச்சத்து இல்லாமல் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் உண்ணும் உணவு சரிவிகித உணவாகவும் வெவ்வேறு வகை சத்துகளைக் கொண்டதாகவும் இல்லை. கீரை, காய்கறி, பழங்கள், நவதானியங்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றை கோதுமையுடன் கலந்து உண்ணும்போது குழந்தைகளின் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை வெகுவாகக் குறைகிறது. 640 மாவட்டங்களில், 19 விதமான உணவுப் பண்டங்களைக் கலந்து உண்ணும் குழந்தைகளை ஆய்வுசெய்தபோது வயதுக்கேற்ற எடை, உயரம் இல்லாத குறைகள் கணிசமாகக் குறைந்தன. அந்தப் பகுதிகளில் 12% குழந்தைகள் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். வெறும் 3 உணவுப் பண்டங்களை மட்டுமே உண்பவர்களில் 50% பேர் குறைவான வளர்ச்சியுடையவர்களாக இருந்தனர்.

## தமிழ்நாட்டின் சிறப்பு

தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலுமே சத்துணவு வழங்கப்படுகிறது. இதனால், மிகக் குறைவான குழந்தைகள்தான் வயதுக்கேற்ற உயரம், எடை, வலிமை இல்லாமல் இருக்கின்றனர். பெரும்பாலானவர்கள் நல்ல உயரம், எடை ஆகியவற்றுடன் ஆரோக்கியமாக இருக்கின்றனர்.

ஊட்டச்சத்து மிக்க, சரிவிகித உணவு அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைக்க, அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியம். அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுக்குள் வைக்க வேண்டும். பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டும். விலையைக் குறைக்க மானியங்களை வழங்க வேண்டும். ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து வளர்ச்சித் திட்டம் நல்லதொரு கருவி. ஆனால், அதன் செயல்பாடு திருப்திகரமாக இல்லை.

மிகவும் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் குழந்தைகளுக்கு ஒரே மாதிரியான உணவு தரப்படாமல், வெவ்வேறு வகை ஊட்டச்சத்து உணவு தொடர்ந்து தரப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காகத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். தேசிய ஊட்டச்சத்து இயக்கம் தொடங்கப்படுவது வரவேற்கத்தக்கது. குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் கர்ப்பிணிகளுக்கும் ஊட்டச்சத்துள்ள உணவு வழங்குதல் சிறந்த பலன் அளிக்கும்!

*© 'தி இந்து', சுருக்கமாக தமிழில்: சாரி.*

# புத்தக விமர்சனம்

## மரம் சுமக்கும் யானைகளின் பிளிறல்

### நூல் ஆசிரியர்: வதிலை பிரபா

விலை : ரூ. 100


வாழ்வியல்

வெளியீடு:

**ஓவியா பதிப்பகம்**

திண்டுக்கல்.



**வ**த்தலக்குண்டு எனும் ஊரின் சுருக்கப் பெயரான வதிலையை தன் பெயருக்கு முன்னால் இணைத்துக் கொண்டுள்ள நூலாசிரியர் வதிலை பிரபா, ஏராளமான கட்டுரைகளையும், விமர்சனங்களையும் எழுதியுள்ளார். இவரின் சமீபத்திய நூலான 'மரம் சுமக்கும் யானைகளின் பிளிறல்' கவிதைத் தொகுப்பு, இயற்கை சார்ந்த ஒரு அற்புதமான படைப்பு.

ஒரு யானையோ, மரமோ, நதியோ, வனமோ, குளமோ, சமுத்திரமோ, நாம் எதையும் எளிதில் கடந்து சென்று விடமுடியாதபடி பக்கத்துக்குப் பக்கம் இயற்கையின் நேசிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் கவிஞர்.

நதிகளைப் பற்றியும் குளங்களைப் பற்றியும் வனங்களையும் நீர் நிலைகளையும் பேண வேண்டிய அவசியத்தை உணர்த்தியிருக்கும் இந்நூல் காலத்தின் தேவை.

# அறிவோம் தமிழர்

## ஐராவதம் மகாதேவன்: தமிழின் தொன்மைக்குச் சான்றுகளை கொடுத்தவர்

வேதியியலும் சட்டமும் பயின்று இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக வேலைக்குச் சேர்ந்த ஒருவர், தமிழ்க் கல்வெட்டியலில் சாதனை படைக்க முடியும் என்பதை எவராலும் நம்ப முடியாது. அத்தகைய நம்ப முடியாத அதிசய மனிதர்தான் ஐராவதம் மகாதேவன். அவருக்குள் கல்வெட்டு குறித்த ஆர்வத்தைத் தூண்டிவிட்ட கலை வரலாற்று அறிஞர் சி.சிவராமமூர்த்திக்கும், அவரைத் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வை நோக்கி ஆற்றுப்படுத்திய கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, கே.வி.சுப்ரமணிய அய்யர் ஆகியோருக்கும் தமிழ் ஆய்வுலகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

சங்க காலம் என நாம் இப்போது பெருமைப் பட்டுக்கொள்கிற காலத்தை உறுதிசெய்ய இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலக்கியப் பிரதிகளுக்கு அப்பால் போதுமான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. பல்லவர் காலத்துக்கு முற்பட்ட வரலாறு குறித்து வரலாற்றாசிரியர்களால் உறுதிபட எதையும் கூற முடியாத நிலை. அத்தகைய சூழலில், கல்வெட்டுத் துறையில் பெரும் புரட்சியை உருவாக்கியவர் கே.வி.சுப்ரமணிய அய்யர். 1924—ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் அவர் வாசித்தளித்த கட்டுரையில்தான் முதன்முதலாகத் தமிழ்நாட்டின் இயற்கையான குகைகளில் காணப்படும் கல்வெட்டுகள் தமிழில்தான் எழுதப்பட்டிருக்கின்றன என்றார்.

அதுவரை அந்தக் கல்வெட்டுகள் வட இந்தியா விலிருந்து வந்த பௌத்த துறவிகளால் பிராமியிலும், பிராகிருத மொழியிலும் எழுதப்பட்டவை, அவற்றுக்கும் தமிழக வரலாற்றுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றுதான் வரலாற்றாசிரியர்கள் எண்ணிக்கொண்டிருந்தனர். அதை மறுத்து, குகைக் கல்வெட்டுகளில் தமிழுக்கே உரிய சிறப்பு எழுத்துகளான ழ, ள, ற, ன போன்ற எழுத்துகள் இருப்பதையும், தமிழ்ச் சொற்கள் இருப்பதையும், தமிழ் இலக்கணம் இருப்பதையும் சுட்டிக்காட்டி முதன்முதலாக நிரூபித்தார். அவரது கருத்து அறிஞர்களிடையே உடனடித் தாக்கம் எதையும் நிகழ்த்தவில்லை.




அடுத்து தி.நா.சுப்பிரமணியம் 1938—ல் வெளியிட்ட ‘பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள்’ என்ற நூலில் ஆந்திர மாநிலம், பட்டிப்புரோலுவில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகளோடு ஒப்பிட்டுத் தமிழ்க் கல்வெட்டுகளைப் படிக்க ஒரு புதிய முறையைச் சுட்டிக்காட்டினார்.

இந்த இரு ஆளுமைகளின் பங்களிப்புகளுக்குப் பின்னரும்கூட கல்வெட்டியல் தொய்வடைந்துதான் கிடந்தது. அதைப் போக்கும் நோக்கில்தான் ஐராவதம் மகாதேவனை கே.வி.சுப்ரமணிய அய்யர், தமிழ் பிராமி ஆராய்ச்சியை நோக்கித் திசை திருப்பிவிட்டார் போலும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக மொழி உணர்வில் தமிழகம் தகித்துக்கொண்டிருந்தபோதுதான் சங்க காலத்தைச் சேர்ந்த புகளூர் கல்வெட்டுகளைக் கண்டறிந்து ஐராவதம் மகாதேவன் வெளிப்படுத்தினார். அதுவரை சங்க காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் எதுவும் கண்டறியப்படவில்லை.

சங்க காலத்தைச் சேர்ந்த மாங்குளம் கல்வெட்டுகளும் அவரால் கண்டறியப்பட்டன. அவரது கண்டுபிடிப்புகளால் 1966—ல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாடு பொருள் பொதிந்ததாக மாறியது.


தமிழின் தொன்மையைத் தனது கடும் உழைப்பால், ஆய்வுத் திறத்தால் உலக அரங்குக்கு எடுத்துச்சென்றவர் ஐராவதம் மகாதேவன். 38 ஆண்டு காலம் உழைத்து அவர் உருவாக்கிய பழந்தமிழ்க் கல்வெட்டுகள் குறித்த ஆய்வு நூல் (Early Tamil Epigraphy, Harward University press and CreA, 2003) இந்திய வரலாறு என்றாலே, அது

# பெருமை

## ரவிக்குமார்

வட இந்திய வரலாறுதான் என்றிருந்த நிலையை மாற்றுவதற்கு உதவியது. தமிழ் பிராமி என அவரால் அழைக்கப்படும் பழந்தமிழ் எழுத்துகளையும் ஆரம்ப கால வட்டெழுத்துகளையும் புரிந்துகொள்ள முழுமையானதொரு வழிகாட்டியாக அது விளங்குகிறது. கிமு இரண்டாம் நூற்றாண்டளவில் தமிழகத்திலிருந்த கல்வி நிலையையும் அந்நூல் எடுத்துக்காட்டுகிறது.

எழுத்தறிவு குறித்த விஷயத்தில் கன்னட,



தெலுங்கு மொழிகளுக்கும் தமிழுக்கும் இடையிலான வேறுபாட்டை ஐராவதம் மகாதேவன் தெளிவுபடுத்தியுள்ளார். “தமிழகத்தில் முதன்முதலாக எழுத்துகள் தோன்றிப் பரவிய சூழ்நிலை அதே காலகட்டத்தில் திராவிட மொழிகள் வழக்கிலிருந்த ஆந்திர — கர்நாடக மாநிலங்களிலிருந்த சூழ்நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது என்பது உண்மையிலேயே மிகுந்த வியப்பை ஏற்படுத்துகிறது. தமிழகத்தில் முதன்முதலில் எழுத்துகள் தோன்றிய காலத்தை ‘முதல் அறிவொளி இயக்கம்’ என்று கூற முடியும். ஆனால் ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் பிராமி எழுத்து முறை பரவியிருந்த போதிலும் அங்கு ‘அறிவொளி இயக்கம்’ தோன்றியதாகக் கருத முடியாது” எனக் குறிப்பிடும் அவர், அதற்கான காரணங்களையும் பட்டியலிடுகிறார்.




இப்படிக் காரணங்களாக அவர் குறிப்பிடுவனவற்றில் முக்கியமானது, “அரசவையிலும், மேனிலை மக்களிடையேயும் வழிபாட்டுத் தலங்களிலும் மட்டுமே எழுத்தறிவு என்ற நிலை தமிழகத்தில் காணப்படவில்லை. மாறாக, எல்லா நிலைகளிலும் எல்லா மக்களிடையேயும் எழுத்தறிவு மிகப் பரவலாகக் காணப்பட்டது என்பது என் ஆய்வின் ஒரு முக்கிய முடிவாகும்.”

### சிந்துவெளி எழுத்துகளும் திராவிடமும்

ஐராவதம் மகாதேவன் கவனம் செலுத்திய இன்னொரு துறை சிந்துவெளி எழுத்துகள் குறித்தனவாகும். சிந்துவெளி நாகரிகத்தை ஆரியக் கலப்பில்லாத அதற்கு முற்பட்ட நாகரிகம் என நிறுவினார் ஐராவதம் மகாதேவன். “சிந்துவெளி

நாகரிகம் ஒரு நகர நாகரிகம். ஆனால், ஆரியர்களுடைய நாகரிகமோ கிராமப்புறத்தைச் சார்ந்த மேய்ச்சல் நிலத்தோடு தொடர்புடைய நாகரிகமாகும். சிந்துவெளியில் கிடைத்த குறியீடுகள், முத்திரைகளில் பல்வேறுவிதமான விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை எதிலும் குதிரையின் உருவம் காணப்படவில்லை. குதிரை என்பது ஆரியர்களின் வருகைக்குப் பிறகே இந்தியாவில் அறிமுகமானது" என்று எடுத்துக்காட்டினார் ஐராவதம் மகாதேவன்.



## சிந்துவெளிப் பண்பாடு

ஒரு திராவிடப் பண்பாடுதான் என்று நீண்டகால ஆராய்ச்சியின் மூலம் நிரூபணம் செய்த அஸ்கோ பர்போலாவின் வாதத்தை வழிமொழிந்த ஐராவதம் மகாதேவன், சிந்துவெளிக் குறியீடுகளை அஸ்கோ பர்போலா படித்த முறையில் சில குறைபாடுகள் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். பர்போலா 'அணில்' என்ற உருவத்தை 'பிள்ளை' எனப் பொருள் கொண்டதையும், 'வளையல்' போன்ற குறியீட்டுக்கு 'முருகு' என்று பொருள் கொண்டதையும் மொழியியல் அடிப்படையில் தவறென்று சுட்டிக்காட்டினார்.




சிந்துவெளிக் குறியீடுகளைப் படிப்பதற்கு ஐராவதம் மகாதேவன் கையாண்ட முறையே நம்பகமானதாக உள்ளது.

## இரு முக்கியப் பங்களிப்புகள்

ஐராவதம் மகாதேவன் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கும் மேலான தனது ஆய்வுகளால் தமிழ்ச் சமூகத்துக்கு இரண்டு மிகப் பெரிய பங்களிப்புகளைச் செய்திருக்கிறார்:

தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் மூலமாகத் தமிழ் எழுத்தின் தொன்மையை நிறுவியது மட்டுமின்றி, அந்த எழுத்துகளின் அடிப்படையில், அப்போது இருந்த சமூகத்தில் இந்து மதத்தின் தடயம் எதுவும் இல்லை என்பதை ஆதாரபூர்வமாக நிறுவினார். இதன் மூலம் தமிழர் சமயத்தின் தனித்துவத்துக்கு வலு சேர்த்திருக்கிறார்.


சிந்துவெளிப் பண்பாடு திராவிடப் பண்பாடுதான் எனக் காட்டியதோடு அங்கு கண்டறியப்பட்ட குறியீடுகளைப் படிப்பதற்கு ஒப்பீட்டளவில் நம்பகமானதொரு முறையை உருவாக்கி, அங்கே கிடைப்பவை தமிழ் எழுத்துகளின் முன்னோடியான வடிவங்கள்தான் என உறுதிசெய்தார்.

ஐராவதம் மகாதேவன் முன்னெடுத்த இந்த ஆய்வுகள் இரண்டுமே தமிழ் மொழியின், பண்பாட்டின் தனித்துவத்தை நிறுவக்கூடியவை. அந்த ஆய்வுகளைத் தொடர்ந்து மேலே எடுத்துச்செல்லக்கூடிய ஆய்வாளர்களை உருவாக்குவதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

## தமிழின் தொன்மையை உலகுக்கு உணர்த்திய பேரறிஞர்

நேர்மையான அதிகாரி, இலக்கியத்துக்கும் அறிவியலுக்கும் மைய நீரோட்ட பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்த முன்னோடி இதழாளர், தமிழ் எழுத்து வடிவத்தின் வரலாற்றையும் சிந்துச் சமவெளி எழுத்துகளையும் பற்றிய ஆராய்ச்சிக்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக்கொண்ட ஆய்வாளர் என்று

பன்முக ஆளுமையாக விளங்கியவர் ஐராவதம் மகாதேவன்.




தான் பங்கெடுத்துக்கொண்ட ஒவ்வொரு துறையிலும் தனது முன்னோடித் தடங்களைப் பதித்த அவரின் மறைவு தமிழியலுக்கு மட்டுமல்ல, இந்தியவியலுக்கும் பேரிழப்பு!

27 ஆண்டு காலம் ஆட்சிப்பணித் துறையில் மத்திய — மாநில அரசுகளின் முக்கியப் பொறுப்புகளை வகித்த ஐராவதம் மகாதேவன் நேர்மைக்கும் கண்ணியத்துக்கும் முன்னுதாரணமாக விளங்கியவர். ஆட்சிப்பணித் துறையிலிருந்து விருப்ப ஓய்வுபெற்ற அவர், கல்வெட்டியல் ஆய்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அவர் 'தினமணி' ஆசிரியர் பொறுப்பிலிருந்த நான்காண்டு காலம் தமிழ் இதழியலின் திருப்புமுனைக் காலகட்டம்.

பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியதோடு தமிழ்மணி, அறிவியல்மணி பகுதிகளைத் தொடங்கி, தமிழ் வாசகர்களுக்கு தமிழ் இலக்கியங்கள், அறிவியல் சார்ந்த கட்டுரைகளைக் கொண்டுசேர்த்தார். நாளிதழின் மொழிப் பயன்பாட்டைச் செழுமைப்படுத்தினார்.

பண்டைக் கால வரலாற்றுக்கான முதன்மையான வரலாற்றுச் சான்று கல்வெட்டுகள்தான். அசோகரின் கல்வெட்டுகளுக்கு ஜேம்ஸ் பிரின்செப் பொருள்விளக்கம் அளித்தபோதுதான் வட இந்தியாவின் பண்டைக் கால வரலாறு உலகறியும் வாய்ப்பு கிடைத்தது. தென்னகமோ, வரலாற்றுக்கும் முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்த எழுத்து வடிவங்களைக் கொண்டிருந்தபோதும் அவை குகைகளிலும் மலைப்பாறைகளிலும் கண்டுகொள்ளப்படாமலேயே கிடந்தன.

கல்வெட்டுகளின் துணைகொண்டு தமிழ் எழுத்து வடிவங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த ஐராவதம் மகாதேவன், தமிழ் எழுத்து வடிவத்தின் வளர்ச்சியையும் சிந்துவெளி எழுத்துகளுக்கும் இடையிலான தொடர்பையும் விளக்கினார்.

சங்க கால மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தார்கள் என்பதற்கு ஐராவதம் மகாதேவனின் ஆய்வுகளே அடிப்படையாக இருக்கின்றன. கல்வெட்டில் தொடங்கிய அவரது ஆய்வுப் பயணம் தொடர்ந்து நாணயங்கள், குகைகள், பாறைகள், பானை ஓடுகள், சொல் ஆராய்ச்சி என்று விரிந்து பரந்தது.

பழந்தமிழர் வரலாற்றைக் கவ்வியிருந்த புகைமூட்டங்கள் ஐராவதம் மகாதேவனின் ஆய்வு வெளிச்சத்தால் நீங்கின. தமிழியல் மற்றும் தொன்மை வரலாறு குறித்த ஆராய்ச்சியை அறிவியல்பூர்வமாக அணுகியவர் ஐராவதம் மகாதேவன். அதுவே அவரது ஆய்வு முடிவுகளின் அழுத்தமான அடிப்படை. கல்விப்புலத்தை நேரடியாகச் சாராமல் இதைச் செய்துமுடித்திருக்கிறார் என்பது இன்னொரு வியப்பு.




சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம், பழந்தமிழ்க் கல்வெட்டுகள் குறித்த அவரது இரண்டு ஆய்வு நூல்களும் தமிழியல் மற்றும் தொன்மை வரலாற்றுத் துறைக்கு மிக முக்கியமான பங்களிப்பு. இனி அத்துறையில் அடியெடுத்துவைக்கும் ஒவ்வொரு ஆய்வாளருக்கும் அது வழிகாட்டியாக, கையேடாக, பாடநூலாகத் திகழும்.

ஏறக்குறைய நூறு ஆண்டுகளாக நடந்துவரும் சிந்துச் சமவெளி நாகரிக ஆய்வை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி, அடுத்தகட்டத்துக்கு முன்னெடுத்துச் சென்றவர் ஐராவதம் மகாதேவன். இந்திய வரலாற்று ஆய்வை வழிநடத்திய அறிஞர்களின் பெயர்களில் தமிழாளுமை ஐராவதம் மகாதேவனின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்

# தவறு

அழகிய சிங்கர்

மாத்திரத்திலேயே கல்யாணம் செய்துகொண்டு அவளுடன் குடும்பம் நடத்த வேண்டுமென்று தோன்றியதில் வியப்பேதுமில்லை. பார்க்க உயரமாக கொஞ்சம் வெளுப்பாகத் தோற்றமளித்தாள். நான் அணிந்திருப்பதுபோல் அவளும் கண்ணடி அணிந்திருந்தாள். பிரசுரமான என் முதல் கதையைப் பாராட்டி என்னுடன் நட்பைத் துவக்கியவள். என் முதல் கதை ஒரு சிறு பத்திரிக்கையில் பிரசுரமாகி இருந்தது. பத்திரிக்கையின் நூறு சந்தாதாரர்களில் பலர் என் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு நாள் ஜகன் என்னைத் தொடர்புகொண்டு அவன் பணிபுரியும் பகுதிக்கு வரச் சொன்னான். இரண்டாவது மாடியிலிருந்து, ஐந்தாவது மாடியிலிருக்கும் அவனிடத்திற்குச் சென்றேன். அப்போதுதான் பத்மாவின் அறிமுகம் எனக்குக் கிட்டியது. பத்மா ஜகன் பக்கத்திலுள்ள இருக்கையில் அமர்ந்திருந்தாள். கையில் என் கதை பிரசுரமான சிறு பத்திரிக்கை. சம்பிரதாய வணக்கத்துடன் அறிமுகம் முடிந்து, நான் ஜகனுடன் பேசிக்கொண்டிருந்தேன். பத்மாவைப் பார்த்த திகைப்பு என் மனத்திலிருந்து மறையவில்லை என்பதை ஜகன் உணர்ந்திருக்கலாம்.

எங்கள் பேச்சின் நடுவில் 'ஒங்க செருப்பு நன்றாக இருக்கிறது ' என்றாள் பத்மா எதிர்பாராவிதமாய். நான் திகைத்துப் போய் என் செருப்பைப் பார்த்தேன். நான் அணிந்திருந்தது பழைய செருப்பு. அதைப் பார்த்தால் பாராட்டும்படி தோன்றாது.




பத்மா சிரித்தபடியே, 'ஒங்கக் கதையைச் சொன்னேன் ' என்றாள்.

என் திகைப்பு ஆச்சரியமாக மாறி புன்னகை ததும்பும் முகத்தோடு அவளைப் பார்க்க ஆரம்பித்தேன். பிரசுரமான என் முதல் சிறு கதையின் தலைப்பு 'செருப்பு ' என்பது எப்படி எனக்கு மறந்தது என்று தெரியவில்லை. ஆனால் என் முதல் கதையை நான் சிறப்பாக எழுதவில்லை. பத்மாவின் நட்பு கிடைக்க என் கதை உதவி செய்துவிட்டது.

இது நடந்த இரண்டு வாரம் கழித்து பத்மா வீட்டிற்கு வந்தாள். கூடவே அவளுடன் அவள் வீட்டில் பணிபுரியும் பெண்ணையும் அழைத்து வந்திருந்தாள்.

அவள் என் வீட்டிற்கு வருவது முதல் தடவை என்பதோடல்லாமல் பணிப்பெண்ணுடன் வருவது ஒருவித ஜாக்கிரதை உணர்வாகக்கூட இருக்கலாமென்று தோன்றியது. நானும் அவளும் ஒரே பகுதியில் வசித்து வருகிறோம்.

அவளை 'வா ' வென்று கூப்பிட்டு உட்கார வைத்தேன். பணிப்பெண் வாசல் கதவைப் பிடித்தபடி நின்றிருந்தாள். வீட்டிலுள்ளவர்களிடம் பத்மாவை அறிமுகப்படுத்தினேன். அவளுக்குக் காப்பி தயார் செய்யும்படி உள்ளே ஆணையிட்டேன். பத்மா கூச்சத்துடன் அமர்ந்திருப்பதுபோல் தென்பட்டாள். நானும் சங்கடத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

'என்ன காலை நேரத்திலே ? '

'எனக்கு லீவு சொல்லணும் ' என்று என் கையில்

ஒரு லீவு லெட்டரைக் கொடுத்தாள். பிறகு சுற்று முற்றும் வீட்டைப் பார்வையிட்டாள். நேரிடையாக என்னைப் பார்த்துப் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பது போல்.

'என்ன திடீர்ன்னு லீவு ? '

'ஊர்ல கொஞ்சம் வேலை இருக்கு. சொந்த ஊருக்கு அவசரமாப் போகணும். ' பத்மா காப்பி குடித்துவிட்டு வீட்டைவிட்டுக் கிளம்பும்போது, என் கையில் அவள் எழுதி இருந்த கதையை கொடுத்தாள்.

'எனக்கும் எழுதணும்னு ரொம்பநாள் ஆசை இதப் படிச்சுப் பார்த்து எப்படி இருக்குன்னு சொல்லுங்க. ' என்றாள்.

நான் அந்தக் கதையை வாங்கி வைத்துக்கொண்டேன். எனக்கு அதன் மூலம் அவளுடன் ஏற்படுகிற தொடர்பு பிடித்திருந்தது. அவள் விடைப்பெற்றுக் கொண்டு சென்றுவிட்டாள். எனக்கு அன்று முழுவதும் அவள் ஞாபகமாகவே இருந்தது.



இரண்டு மூன்று நாட்கள் கழிந்தும், அவள் கதையைப் படிக்கத் தொடங்கவில்லை நான். அவளிடமிருந்து கதையை வாங்கியவுடனேயே, அவள் எழுதியிருக்கும் கதையின் நாடி புரிந்துவிட்டது. சில புத்தகங்கள்கூட அப்படித்தான். ஒரு பக்கத்தைக்கூட புரட்டிப் பார்க்க வேண்டுமென்கிற உணர்வை உண்டாக்காது. இதெற்கெல்லாம் அனுபவம் வேண்டும். கடையில் எதையாவது வாங்கச் செல்லும்போது, சிலருக்கு பொருள்களைப் பார்த்த மாத்திரத்திலேயே எடைப்போட தெரிகிற அனுபவம்போல் தான் இதுவும். இருந்தாலும் பத்மாவிற்காக கதையைப் படித்துத்தான் ஆகவேண்டும். அவள் கதை என் மனதைக் கவரவில்லை. அதில் எந்தவித நயமும் இல்லை, பத்திரிக்கைகளில் வருகிற கதைகளையெல்லாம் படித்து அதுமாதிரிகூட எழுத அவளுக்குத் தெரியவில்லை.

பத்மாவை அவள் கதைக்காகவாவது பார்க்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டேன். ஒரு நாள் உணவு இடைவேளையின் போது, தொலைபேசியில் அவள் பணி புரியும் பகுதிக்குத் தொடர்பு கொண்டேன்.

'ஓங்கக் கதையைப்பத்திப் பேசணும் '

'எங்கே பாக்கலாம் ? '

'ஓட்டலுக்குப் போலாமா ? ' அவள் யோசிப்பதுபோல் தோன்றியது.

'என்ன பதிலே காணும் ? '

'சரி ' என்றாள். 'அப்ப நீங்க ஓட்டலுக்குப் போய் இருங்க, நான் வரேன். '

எங்கள் அலுவலகக் கட்டிடத்திற்கு எதிரிலிருந்தது அந்த ஓட்டல், ஓட்டலில் தனி அறையில் நாங்கள் இருவரும் சென்றமர்ந்தோம். அவள் இயல்பாக இல்லை என்பதோடல்லாமல், நானும் இயல்பாக இல்லை என்பதை உணர்ந்தேன். சாப்பிட உணவு வகைகளைக் குறித்துக் கொடுத்துவிட்டு,

'என்ன, ஊருக்கெல்லாம் போயிட்டு வந்தாச்சா ? ' என்று செயற்கையாகப் பேச்சை ஆரம்பித்தேன்.




'ஊருக்குப் போனா, ஏன் இங்க வரணும்னு தோணுது. ? '

'ஏன் '

'நிம்மதியான வாழ்க்கைஞ். வேளா வேளைக்குச் சாப்பாடுஞ். இஷ்டத்திற்குச் சுத்தலாம்ஞ். நல்லா தூங்கலாம்ஞ். ஆபீஸ் போகணும்னு நினைப்பே வராது '

'எனக்கும் அதுமாதிரியான ஊர் கிடைச்சா நல்லா இருக்கும். '

பத்மா ஒன்றும் பேசாமல் சிரித்தாள். ஒரு வினாடி அவள் சிரிப்பைப் பார்த்து அதிர்ந்துவிட்டேன். நான் அவளை ஓட்டலுக்குக் கூப்பிட்டது கொஞ்சம் துணிச்சலான விஷயம். இது என் மனத்திற்குள் நெருடியதால், அவளுடன் நான் ஓட்டலுக்குள் நுழையும்போது, இயல்பாக இல்லை. ஜாக்கிரதை உணர்வோடு இருந்தேன். பத்மா பார்ப்பதற்கு கவர்ச்சியாக உடை உடுத்தி இருந்தாள். அதுவும் மனதை பிடித்து இழுத்தது '

'என்ன நான் பேசறது ஓங்கக் காதுலே ஏறலையா

? ‘ என்று அவள் கேட்டபோது, நான் திகைத்தேன்.

‘என்ன கேட்டாங்க நீங்க ? ‘

‘என் கதையைப்பத்தி ‘

‘நான் ஏதோ யோசனையிலே இருந்துட்டேன் ‘

‘எழுதறவங்களே அப்படித்தான் ‘

‘நீங்க நினைக்கிற மாதிரி எழுதறவங்க, அப்படியெல்லாம் கிடையாது.’ அவள் அதற்குப்பதில் எதுவும் சொல்லாமல் இருந்தாள். சாப்பிடுவதற்கான உணவு வகைகள் வந்ததால், எங்களிடையே மௌனம் நிலவியது. பத்மாவின் விரல்கள் நீளமாகத் தெரிந்தன. சாப்பிடும்போது அவளிடம் தென்பட்ட ஒழுங்கு எனக்குள் பிரமிப்பை உண்டாக்கியது.

‘ஒங்கக் கதையை இன்னும் நல்லா எழுதி இருக்கணும் ‘

இதைக் கேட்டவுடன் அவள்முகம் சுருங்கி விட்டதுபோல் தோற்றமளித்தது. நான் அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது.

நாங்களிருவரும் அந்த இடத்தை விட்டுக் கிளம்பும்போது, அவள் எழுதிய கதையைத் திருப்பிக் கொடுத்தேன். என்னிடம் முதன்முதலாக அவள் கதையை கொடுத்தபோது ஏற்பட்ட மலர்ச்சி, இப்போது திரும்பப் பெறும்போது ஏற்படவில்லை. ஆனால் அவள் நட்பை என்னால் இழக்க முடியாது.

‘ஒரு கதையை இன்னும் திறன்பட கணிக்க எனக்கு அனுபவமில்லை ‘ என்றேன். நான் சொன்ன இந்த வார்த்தைகள் அவளுக்குத் திருப்தியைத் தந்திருக்கும்.

இந்தச் சந்திப்பிற்குப் பிறகு, நானும் அவளும் இரண்டு மூன்று வாரங்கள் பார்த்துக் கொள்ளவில்லை. உண்மையான காரணம், அன்று ஓட்டலிலிருந்து நாங்கள் திரும்பி வரும்போது ஜகன் பார்த்துவிட்டான். அவன் கிண்டலிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்கிற ஜாக்கிரதை உணர்வு எனக்கு ஏற்பட்டது. பத்மாவிற்கும் அப்படித் தோன்றி இருக்கலாம்.




ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை நேரத்தில், வீட்டிற்கு வெண்ணெய் வாங்குவதற்காக வெளியே சென்று கொண்டிருந்தேன். போகும் வழியில் பத்மாவை அவள் வீட்டு வாசலில் பார்க்க நேர்ந்தது. அவள் இருக்குமிடம் எனக்குத் தெரிந்தாலும், ஒரு முறை கூட அவள் வீட்டிற்குள் நான் நுழைந்ததில்லை. அவளும் எங்கேயோ கிளம்புவதற்குத் தயாராக இருப்பவள்போல் தென்பட்டாள்.

‘வீட்டிற்கு வர்றீங்களா ‘ என்று உபசரித்தாள். எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் அவள் வீட்டிற்குள் நுழைந்தேன். அவள் வீட்டிலுள்ள எல்லோரிடமும் என்னை அறிமுகப்படுத்தினாள். அன்று வீட்டிற்கு அழைத்து வந்த பணிப்பெண் உள்பட. அவள் அம்மா அவளைப் போல் வெளுப்பாகத் தென்பட்டாள். அவள் அப்பாவைவிட அவள் அம்மா நன்றாகப் பழகினாள். என் குடும்பத்தைப் பற்றியெல்லாம் விசாரித்தாள். அவள் அம்மா காப்பி எடுத்துவர உள்ளே சென்றாள்.

‘எங்கே இந்தக் காலை நேரத்திலே கிளம்பிட்டீங்க ? ‘ என்று கேட்டேன் பத்மாவைப் பார்த்து.

‘கம்ப்யூட்டர் கத்துக்கலாம்னுதான் ‘

‘என்னாலே ஒங்க நேரம் வீணாப் போச்சா ? ‘

‘இல்லேஞ்இன்னிக்குத்தான் போலாம்னு நினைச்சுண்டிருந்தேன். நீங்களும் சேர்றீங்களா. நம்ம இடத்திலேருந்து கிட்டக்க ‘

நான் யோசித்தேன். இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது. பத்மாவை அலுவலகத்தில் பார்ப்பது அவ்வளவு சுலபமில்லை. ஜகன் இருப்பான். காரணமில்லாமல் அவளைப் பார்க்கணும்னா கம்ப்யூட்டர் வகுப்புதான் லாயிக்கு.

நானும் அவளும் கம்ப்யூட்டர் கற்றுக்கொள்ள ஒன்றாக சேர்ந்தோம். தினமும் அவள் வகுப்பிற்குச் செல்லும் நேரத்தை அறிந்து அவள் வீடு இருக்கும் தெருமுனையில் சந்திப்பதுபோல் வருவேன். பிறகு இருவரும் ஒன்றாகச் செல்வோம். சில நாட்களில் நான் வருவதை அவள் எதிர்ப்பார்க்கத் தொடங்கிவிட்டாள்.

ஒருநாள் காலை நேரத்தில் அவளைச் சந்திக்கவில்லை. கம்ப்யூட்டர் வகுப்பில் அவள் இல்லாதது நன்றாகத் தெரிந்தது. அன்று வகுப்புமுடிந்து, திரும்பும்போது போகும்வழியில் அவள் நின்றுகொண்டிருந்தாள்.

‘இன்னிக்கு ஏன் வரலை ? ‘

‘எனக்கு கல்யாணம் நிச்சயம் பண்றாங்க ‘

நான் பேசாமல் திகைத்து நின்றேன். கிட்டத்தட்ட அதிர்ச்சி அடைந்த நிலைதான். அதை அவள் புரிந்து கொண்டு விடுவாளென்று நினைத்து,

‘வாழ்த்துக்கள் ‘ என்று கூறி அவளிடமிருந்து விடைபெற்றேன்.

அன்று இரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. மொட்டை மாடியில் இருட்டில் அமர்ந்துக்கொண்டு 'ஆனந்த்ஷங்கர் ' பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தேன். சோகமாக இருப்பது போல் உணர்ந்தேன். ஏதோ ஒன்று என்னிடமிருந்து நழுவிவிட்டது போலிருந்தது. இந்தச் சமயத்தில் மோசமாக கற்பனை செய்ய ஆரம்பித்தேன். எதிர்பாராவிதமாய் பத்மாவிற்கு இதயநோய் ஏற்பட்டுவிடுவது போலவும், நோயின் காரணமாக, அவளை மணப்பதற்காக நிச்சயமான பையன், அவளை மணக்க மறுத்துவிடுவது போலவும் என் கற்பனை ஓட ஆரம்பித்தது. அவள் இந்த எதிர்பாராத அதிர்ச்சியில் சோகமாக இருக்கும்போது, அவள்முன் நான் தென்பட வேண்டும். அவள் கண்ணீரைத் துடைத்து, அவளை நான் ஏற்பதாகச் சொல்ல வேண்டும்.



பத்மாவைப் பார்ப்பதை நான் கொஞ்ச கொஞ் சமாகக் குறைத்துக் கொண்டேன். ஒரு குறுகிய காலத்திற்குள் கம்ப்யூட்டர் கற்றுக் கொள்வதும் நின்றுவிட்டது. உண்மையில் கம்ப்யூட்டர் எதுவும் என் மூளையில் ஏறவில்லை. எங்கள் அலுவலகம் ஏழு மாடிக் கட்டிடம் கொண்டது. ஆயிரக்கணக்கானவர்கள் பணிபுரியும் இடத்தில் நானும் அவளும் ஏதோ ஒரு மூலையில் இருப்போம். ஒருநாள் எனக்குப் போன் செய்தாள்.

'என்ன உங்களிடமிருந்து போன் வரலை ? '

'எப்ப கல்யாணம் ? '

'இன்னும் நாலைஞ்சு மாசமிருக்கு '

நான் எதிர்பாராவிதமாய் மௌனமாகிவிட்டேன். எனக்கு இயல்பாய் ஏற்படும் விஷயம் இது. அவளுக்கு நடக்கப்போகும் திருமணத்தின் மீது என் கவனம் சென்றுவிட்டதால் என்னால் பேச இயலாமல் போய் விட்டது.

'ஒண்ணுமே பேசமாட்டேங்கறீங்க. '

'ஒண்ணுமில்லை '

'ஏதாவது கற்பனையிலே மூழ்கிட்டாங்களா ? '

'இல்லை '

'அப்புறம் ஏதாவது எழுதினீங்களா ? '

'ஒண்ணும் எழுதலை. '

'அம்மா ஒங்களைப் பாக்கணும்னு சொன்னாங்க. ஏதோ பேசணும்மாஞ்.. ' எதற்கு அவள் அம்மா என்னுடன் பேச வேண்டும் என்று யோசித்தேன்.

'நான் போனை வெச்சுடட்டுமா ?ஞ். '

'கோபப்படாதீங்க, பத்மாஞ். நான் அம்மாவைப் பாக்க வரேன் '

'என்னிக்கு வர்றீங்க ? '

'நாளைக்கு வரேன். '




ஆனால் அடுத்த நாள் அவள் வீட்டிற்குப் போக முடியவில்லை. ஞாபகமாக பத்மாபோன் மூலம் என்னுடன் தொடர்பு கொண்டாள்.

'ஒங்களை எதிர்ப்பார்த்துண்டுருந்தேன் '

'அவசர வேலை வந்துடுத்து. ஞாயிற்றுக்கிழமை வரேனே ? '

அவள் போனை வைத்துவிட்டாள். கோபமாகக் கூட இருக்கலாம். அவள் அம்மா என்னை ஏன் பார்க்க விரும்புகிறாள் ?

ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணி சுமாருக்கு, பத்மா வீட்டிற்குச் சென்றேன். அவள் அம்மாதான் முதலில் தென்பட்டாள். சிரித்தபடியே என்னைக் கூப்பிட்டு உட்காரவைத்தாள். குளித்துவிட்டு தலை மயிரை பறக்க விட்டபடி பத்மா வந்தாள். அவளைப் பார்த்தவுடன், ஒரு வினாடி திகைத்துவிட்டேன். என் உணர்வுகள் துடிக்க ஆரம்பித்தன.

'சங்கருக்கு காப்பி கொண்டு வாம்மா ' என்றாள் அவள் அம்மா பத்மாவைப் பார்த்து.

பத்மா உள்ளே சென்று மறைந்துவிட்டாள். ஒரு மின்னலைப் போலிருந்தது. அவள் அம்மா, பத்மா சிறு குழந்தையாக இருந்து வளர்ந்ததுவரை பலகதைகள் சொல்லிக்கொண்டு வந்தாள். புகைப்படங்களை எடுத்துக்கொண்டு வந்து



காட்டினாள். அந்தப் புகைப்படங்களில் பத்மாவைப் பார்க்க சகிக்கவில்லை. ஒல்லியாக உயரமாக ஒவ்வொரு புகைப்படத்திலும் தென்பட்டாள். அவள் அம்மாவும் அப்பாவும் சேர்ந்திருந்த புகைப்படத்தில் யாரோ ஒருவர் சரியில்லாமல் இருந்தார்கள். பத்மாவைப்பற்றி இன்னும் ஏதோ பேசிக்கொண்டே வந்தாள் அவள் அம்மா. இதெல்லாம் எதற்கு என்று தோன்றியது. பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். முகமலர்ச்சியுடன் பத்மா எனக்கு காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். திரும்பவும் திகைப்புடன் அவளைப் பார்த்தவுடன், எனக்குச் சொல்ல முடியாத துக்கம் ஏற்படுமென்று தோன்றியது. அவள் கையிலிருந்து காப்பி டம்ளரை வாங்கும்போது, கை நழுவி விழுந்துவிடுமென்று நினைத்தேன். இழந்தது இழந்ததுதான். அவளிடம் எனக்கிருந்த ஈடுபாட்டை குறிப்பால் கூட உணர்த்தாமல் போய்விட்டேன். இத்தனை நாட்கள் பழக்கத்தில் அவளாவது உணர்த்தியிருக்கலாம்.

'தம்பி, நீ கதையெல்லாம் எழுதுவியாமே ? '

நான் கூச்சத்துடன் அவள் அம்மாவைப் பார்த்துச் சிரித்தேன். எழுதுவதென்பது இந்த நிமிஷம் வரை உறுதி இல்லாத ஒன்றாகத் தோன்றும் எனக்கு.

'பத்திரிக்கை எதிலாவது பிரசுரமாயிருக்கா ? '

'நீங்க படிக்கிற பத்திரிகையில வராது. '

'வேற எதுல வரும் ? '

'சிறு பத்திரிகையிலதான் வரும் '

'அம்மா, இவர் எழுதின 'செருப்பு ' கதை நல்லாயிருக்கும் '

'பத்மா எங்கிட்ட கூட காட்டிச்சு. அதெல்லாம் எனக்குப் புரியறதில்லே. '

'புரியாது போனாலும், புரிஞ்சாலும் அதெல்லாம் பெரிய விஷயமில்லை. '

நான் கிட்டத்தட்ட எழுந்து விடலாமென்று நினைத்தேன். அவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தது அலுப்பாக இருந்தது. மேலும் பத்மாவின் தோற்றம் என்னைச் சங்கடப்படுத்தியது.




பத்மாவின் அப்பா வெளியில் சென்றவர் வந்தார். நான் சிரித்தபடியே அவரைப் பார்த்து கை கூப்பினேன். எனக்கு அதெல்லாம் செயற்கையாகத்தான் பட்டது. யாரையாவது பார்க்கும்போது, எனக்குத் தலை ஆட்டாமல் தான் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

'பத்மாவைக் கட்டிக்கப் போறவன் எனக்கு தம்பி முறை ஆகணும் '

பத்மா வெட்கப்படுவதுபோல், நான் அவளைப் பார்க்காமலே உணர்ந்தேன். நான் அந்த இடத்திலிருந்து கிளம்புவதற்கான தருணம் வந்து விட்டதாகத் தோன்றியது. இன்னும் அங்கிருப்பது என் சுதந்திரத்தை இழந்து கொண்டிருப்பதுபோல் பட்டது. என்னுடைய நிலையைப் புரிந்துக்கொண்டிருப்பாள். அவள் அம்மா எதிர்பாராத விதமாக.

'என் அருமைக் குழந்தையே ' ' என்றாள் ஆங்கிலத்தில், என்னைப் பார்த்து. அவள் அம்மா ஒரு நர்ஸரி பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் சொல்லித்தரும் டாச்சராகப் பணி புரிகிறாள்.

அவள் அம்மா கூப்பிட்டவிதம், எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நான் ஒன்றும் புரியாமல் அவள் அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

'பத்மா கல்யாணத்துக்கு என்ன பண்ணப் போறேன்னு தெரியலை. பணம் நிறையா செலவாகும் போலத் தோணுது. '

அவள் அம்மா அழைத்ததற்கான காரணம் எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. இதை ஓரளவு நான் ஆரம்பத்திலேயே எதிர்ப்பார்த்தேன். நான் ஒன்றும் பதில் பேசாமலிருந்தேன்.

'நீ தப்பா நினைச்சுக்காதே. நான் ஒன்னை என் பையன் மாதிரி நினைக்கிறேன். பத்மா சொன்னா ஒனக்கு அம்மா கிடையாதாமே. சின்ன வயசிலிருந்து பத்மா கெட்டிக்காரி ஒன்னாலே ஒரு உதவி செய்ய முடியும் எனக்கு நீ மூவாயிரம் நாலாயிரம் முடிஞ்சா எப்படியாவது புரட்டித் தரணும். ஒன்கிட்ட அவ்வளவு பணம் உடனே கிடைக்காது நீ ஒங்க ஆபீஸிலே இருக்கிற சொசைட்டிலே ஒன்னைப் பதிவு செய்தேன்னா பணம் கிடைக்கும்னு பத்மா சொன்னா அதை மாசம் மாசம் பத்மா கொடுத்துடுவா. ரெண்டு பேரும் சேர்ந்து சொசைட்டியில் மெம்பர் ஆனா, ஒருத்தருக்கொருத்தர் சொசைட்டிமூலம் கிடைக்கிற பணத்துக்குப் பொறுப்பேத்துக்கலாம். இரண்டு பேரும் ஒரே ஆபீஸிலே இருக்கிறதனாலே இது சௌகரியம் '.

நான் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக

இருந்தேன்.

'ஒன் முடிவை எனக்கு இப்ப சொல்லணும்னு இல்லை. ஒரு வாரம் கழிச்சுக்கூட சொல்லலாம். ' என்று பேசிக் களைத்துப் போய்விட்டதுபோல் தோற்றமளித்தாள் அவள் அம்மா.

நான் அந்த வீட்டைவிட்டுக் கிளம்பும்போது, ஒன்றை கவனித்தேன். அவள் அப்பா என்னுடன் எதுவும் பேசவில்லை. பத்மா வாசல்வரை என்னுடன் வந்தாள்.

'கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்க, சங்கர். '

'சரி ' என்று கூறியபடி அங்கிருந்து விடுதலை ஆகி வந்தேன்.

கிட்டத்தட்ட ஒரு வாரம் கழித்து பத்மா என்னைப் பார்க்க அலுவலகத்தில் நான் பணிபுரியும் பகுதிக்கு வந்தாள். என் வீட்டிலுள்ளவர்கள் சொசைட்டியில் நான் கடன் வாங்குவதை விரும்பவில்லை. இது மாதிரியான விஷயங்களில் தலை கொடுக்க வேண்டாமென எச்சரிக்கை செய்திருந்தார்கள்.

'வீட்ல வேண்டாம்னு சொல்றாங்க ' என்றேன்.

இதைக் கேட்டவுடன் விருட்டென்று பத்மா அந்த இடத்தில் நிற்காமல் போய்விட்டாள். எனக்கு சங்கடமாகப் போய்விட்டது. எனக்குப் பிடித்தமான பெண்ணின் கோபத்திற்கு ஆளாகிவிட்டேன். ஒரு விதத்தில் நான் சொன்னதும் சரியென்று பட்டது. அலுவலகத்திலுள்ள சொசைட்டியில் கடன் வாங்கினால், சம்பளத்தில் ஒரு கணிசமான தொகை குறைந்து விடுவதோடல்லாமல், கடனை முழுவதும் அடைத்துவிட முடியாமல், அவள் வாங்கும் கடனுக்கும் நான் பொறுப்பேற்றுக்கொள்வதாக ஒப்புதல் அளிக்க வேண்டும். அது இன்னும் தொல்லையான விவகாரம்.

என் மனநிலை அன்று மட்டும் சரியாய் இல்லை. பிறகு என் இயல்பான நிலைக்கு மனநிலை திரும்பிவிட்டது. பலநாட்கள் பத்மா என் கண்ணில் தட்டுப்படவில்லை. நானும் அவளைப் பார்ப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை.

திரும்பவும் பத்மாவை, அவள் கல்யாணப் பத்திரிக்கை கொண்டு வரும்போதுதான் பார்த்தேன். வீட்டிற்கு வந்து பத்திரிக்கை கொடுப்பாளென்று நினைத்திருந்த எனக்கு ஏமாற்றமாக இருந்தது. சாதாரணமாக மற்றவர்களைப் பார்த்து பத்திர்க்கை கொடுப்பது போல் எனக்கும் கொடுத்தாள். பத்திரிக்கையை நீட்டும்போது, ஒரு வார்த்தை சொன்னாள், 'கல்யாணத்துக்கு வாங்க ' என்று. இதுவும், எல்லோருக்கும் சொல்வதுபோல்தான் எனக்கும். அறிமுகமில்லாதவர்களைப் பார்க்க நேரும்போது, ஏற்படும் முகபாவனைகள்தான் அவளிடத்தில் தென்பட்டன. கொஞ்சம் கூர்ந்து அவளைக் கவனிக்கும்போது, அவள் என்னைத் தவிர்ப்பது புரிந்தது.

நான் அவள் போனபிறகு, அவளைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். அவளுக்காக நான் கடன் விஷயத்தில் மாட்டிக்கொள்ளாமலிருந்தது இன்னும் அவள் நினைவிலிருந்து போகவில்லை. ஒரு சமயம் அவள் இதை என்னிடமிருந்து எதிர்ப்பார்க்காமலிருந்திருக்கலாம்.

என்றாலும் அவள் கல்யாணத்திற்கு போவதென்று தீர்மானித்திருந்தேன். அவள் திருமணம் செய்து கொள்ளப்போகும் மண்டபம்கூட நாங்கள் இருந்த பகுதியில்தான் இருந்தது. கிட்டத்தட்ட மேற்கு மாம்பலம் பகுதியில் சிறுவனாக இருந்து இன்றுவரை இருக்கத்தொடங்கி 20 வருடங்கள் மேலிருக்கும். இருபது வருடங்களுக்கு முன்பு, இந்த இடம் பார்க்க சகிக்காமலிருக்கும் போக்குவரத்து இந்தப் பகுதிக்கு வராது. கல்யாணப்பத்திரிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்த மண்டபம் நாங்கள் முன்பு குடியிருந்த (இப்போது சொந்த வீட்டிலிருக்கிறோம்) இடத்திற்கு பக்கத்தில்தான் இருக்க வேண்டும். பல வருடங்களாக எங்கள் பகுதியில் எனக்குத் தெரிந்தது அந்த ஒரு மண்டபம்தான்.



இப்போதெல்லாம் இந்த இடம் மாறிவிட்டது. தார் ரோடு போடப்பட்டு போக்குவரத்தெல்லாம் ஓட ஆரம்பித்துவிட்டது. அதிகமாக நெரிசலுள்ள இடம். அங்கங்கே புதுப்புதுக் கட்டிடங்கள். வேண்டிய பொருள்கள் எங்கும் அலையாமல் கிடைக்கக் கூடிய வசதிகள். மருந்துக் கடைகளும் மருத்துவமனைகளும் அதிகமாக தோன்றிவிட்டன. ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு இயங்கும் உலகமாகத் தோன்றியது. நான் பள்ளியில் படிக்கும் பிராயத்தில், நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாட மொட்டை மைதானத்திற்குப் போவேன், அந்த இடத்தில் இப்போது பிரும்மாண்டமான பள்ளிக்கூடம் ஒன்று உருவாகி விட்டது.தினமும் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்த இடத்தில், நைட் கிரிக்கெட் விளையாடுகிறார்கள். எப்போதும் அந்த இடத்தில் அரசியல் கூட்டமும் நடை பெறும். ரயில்வேஸ்டேஷன் ஒட்டியுள்ள தெருவில், மழைக்காலங்களில் நடக்கவே முடியாது. சேறு படிந்திருக்கும். குறுகலான அந்தத் தெருவில் நெரிசல் அதிகம். இப்போது அங்குள்ள கடைகளை அப்புறப்படுத்திவிட்டு, தெருவை அகலப்படுத்திவிட்டார்கள்.

பத்மாவின் கல்யாணத்திற்காக விடுமுறை எடுக்க வேண்டாமென்று நினைத்திருந்தேன்.



கல்யாணத்தன்று சீக்கிரமாகவே வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டேன். முதல்நாளே அலுவலகத்திற்கு ஒரு மணி நேரம் தாமதமாக வர அனுமதி பெற்றிருந்தேன். முகூர்த்த நேரம் சீக்கிரமாகவே ஆரம்பிப்பதால், சரியாக அந்த நேரத்திற்குள் அங்கு போக இயலவில்லை என்னால்.

கல்யாண மண்டபத்திற்குள் நுழைந்தவுடன் கூட்டமே இல்லை. என்னை வெறும் நாற்காலிகள் வரவேற்றன. நுழைவாயில் நின்று கொண்டிருந்த இரண்டு சிறுமிகள் என்மேல் பன்னீர் தெளித்தார்கள். சந்தனத்தைக் கையில் பூசிக்கொண்டு உள்ளே திரும்பினேன். ஒருவர் என்னைப் பார்த்தபடியே, ‘வாங்க சார், வாங்க ‘ என்று உபசரித்தார். நானும் அவருடன் நடந்தேன். என்னைக் கல்யாண கூடத்திலிருந்து மாடிக்கு அழைத்துக் கொண்டு போனார். அங்கு கிட்டத்தட்ட 20 அல்லது 25 பேர்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். தெரிந்த முகமாக ஒன்றும் கண்ணில் படவில்லை, ஒரு சமயம் அலுவலகத்திலிருந்து இன்னும் யாரும் வரவில்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். இந்த கல்யாணத்திற்காக அவசரப்பட்டு வந்து விட்டதாக எண்ணி வருந்தினேன். டிபன் சாப்பிடும் இடத்திற்கு அழைத்து வந்து, என்னையும் டிபன் சாப்பிட உட்கார வைத்தார்.

இந்த கல்யாணத்தின்போது எனக்குள் ஏற்பட்ட மனநிலையின் போக்கை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. எனக்கும் பத்மாவிற்கும் ஏற்பட வேண்டிய திருமணம், அப்படி நடக்காமல் போனதால், ஏமாற்றம் தரக்கூடிய ஒன்றாக மாறிவிட்டதாக எனக்குத் தோன்றியது. அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருந்தாலும், சாதாரணமாக திருமணம் எல்லோருக்கும் நிகழக்கூடிய ஒன்றுதான். ஆனால் நான் எதையோ எதிர்பார்த்து பழகக்கூடிய பத்மாவாக அவள் எப்படி மாற முடியும்? நான் கடன் தர இயலாது என்று கூறியதிலிருந்து, அவள் போக்கில் தென்பட்ட மாறுதல்கள், என்னைச் சங்கடத்திற்கு உள்ளாக்கிவிட்டன. அவளுக்காக,




அவள் எனக்கில்லை என்று ஆனபிறகு, என்னிடமிருந்து இயல்பாக கழன்று கொண்டாள். கல்யாண கோலத்தில், அவளைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கும் நான், காரணமில்லாத படபடப்புகளுக்கு ஆளாகி இருந்தேன். அந்தக் கோலத்தில் அவளை மட்டும் வெகுசீக்கிரத்தில் பார்த்துவிட்டு திரும்பிவிட வேண்டுமென்று நினைத்திருந்தேன். நல்ல காலம் இதுவரையில் என் கண்ணிற்கு அவள் அம்மா தென்படவில்லை. எல்லோரும் புதியவர்களாக இருந்தார்கள். ஒருவர்கூட எனக்கு அறிமுகமான அல்லது பழக்கமான ஒருவராகத் தென்படவில்லை.

ஒரு வழியாக நான் டிபன் சாப்பிட்டுவிட்டு, கீழே இறங்கி வந்தேன். என்னை மாடிக்கு அழைத்துக் கொண்டு போனவர் கீழே காத்திருந்தார். அவர் என்னைப் பார்த்தவுடன் ஓடி வந்தார்.

‘கல்யாணம் எங்கே நடந்தது ? ‘ என்று நான் அவரைப்பார்த்து கேட்க, அவர் என்னை உள்ளே அழைத்துக்கொண்டு போனார். பத்மாவைப் பார்க்கும் ஆவலுடன், எனக்குள் ஏற்பட்ட படபடப்புடனும் நான் காணப்பட்டேன். நான் நிமிர்ந்து பத்மாவைப் பார்க்க எத்தனித்தபோது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்குண்டதுபோல் மாறிவிட்டிருந்தேன். நான் கண்டது பத்மாவை அல்ல. ஒரு வயதான தம்பதிகளை. மாலையும் கழுத்துமாக சிரித்தபடியே அவலட்சணமாக காட்சி அளித்தார்கள். அவர்கள் என்னைப் பார்த்தும் சிரித்தார்கள். திடுக்கென்று எனக்கு அவர்கள் பக்கத்திற்கு போவதற்கே அருவெறுப்பாய் இருந்தது. எப்படி இந்தத் தவறு நிகழ்ந்ததுஞ். ? நான் உடனே வெளியே வந்துவிட்டேன். என் படப்படப்பு அடங்கவில்லை. வாசலில் போடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றின் மீது நான் தொப்பென்று விழுந்த போது, என்னை டிபனுக்கு அழைத்துக்கொண்டு போனவர், என் அருகில் வந்தார். நான் என் அதிர்ச்சிகளை அவரிடம் காட்டாமல், வலிய புன்னகையை வரவழைத்துக்கொண்டு அவரைப் பார்த்தேன்.

‘நமஸ்காரம் பண்ணீனிங்களா ? ‘

நான் வெறுமனே தலை ஆட்டினேன். அவர் திருப்தியுடன் தள்ளிப் போய் நின்றார். டிபன் சாப்பிட்ட கும்பலிலிருந்த ஒவ்வொருவரும் உள்ளேயும், வெளியேயும் வந்த வண்ணம் இருந்தார்கள்.

எனக்கு தற்போது ஏற்பட்ட சங்கடம், எப்படியாவது இந்த இடத்தை விட்டு ஓடிப்போக வேண்டுமென்பதுதான். ஆனால் என்னை டிபன் சாப்பிட அழைத்துக்கொண்டு போனவர், தூரத்தில் நிற்பதுபோல் பட்டது. அவர் பார்க்காத தருணத்தில் ஓடிப் போய்விடவேண்டும். ஆனால் அவர் நகர்வதாக தெரியவில்லை. தூரத்திலிருந்து

என்னை நோட்டம் விடுவதுபோல்கூட எனக்குத் தோன்றியது. மெதுவாக நகர்ந்து நகர்ந்து போய் விடலாம். பெரிய தர்மசங்கடத்திலல்லவா மாட்டிக்கொண்டு விட்டேன். பாவி மனுஷன் நகர்வதாகக் காணோமேஞ். ? அவர் பார்க்காத சமயத்தில் நான் அவரைப் பார்க்க ஆரம்பித்து, அவரும் என்னை அதுபோல் பார்ப்பதாக உணர்ந்தேன். இந்தச் சமயத்தில்தான் சமயோசிதமாக நடந்து கொள்ள தெரிய வேண்டும். தவறுதலாக இந்தக் கல்யாணத்திற்கு வந்து மாட்டிக்கொண்டதாக யாரிடமும் காட்டிக்கொள்ளக்கூடாது.

அவர் வேறு பக்கம் திரும்பும் சமயம் பார்த்து, பொறுக்க முடியாமல் எழுந்து விட்டேன். நான் நிற்பதைப் பார்த்து, அவர் என்னிடம் ஓடிவந்தார். நானும், அவரும் தேவை இல்லாமல் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக்கொண்டோம்.

'இன்னும் என் நண்பர்கள் வரவில்லை ' என்றேன் மழுப்பலாக.

'அப்படியா ? '
'வாசல்ல போய்ப் பாக்கட்டுமா ? '
'பாருங்களேன் '
நான் வாசலுக்கு வந்தேன். அவர் அசையாமல் நான் இருந்த இடத்தில் நின்றிருந்தார். தெருவை அடைந்த போது, யாரையோ எதிர்பார்த்து நிற்பதுபோல் நடக்க ஆரம்பித்து, கல்யாண மண்டபம் தாண்டியவுடன் ஓட்டமும் நடையுமாக வர ஆரம்பித்துவிட்டேன். என் காரியம் எனக்கே சிரிப்பை மூட்டியது. அந்தத் தெருவை ஒட்டிய பிரதான சாலையை அடைந்தபோது, ஒருமுறை கல்யாண மண்டபத்தை நோட்டம் விட்டேன். யாரும் என்னை கவனிக்கவில்லை. கல்யாண மண்டபம் என் பார்வையிலிருந்து மறைந்தபிறகுதான் எனக்கு மூச்சு வந்தது.

அவசரம் அவசரமாக பத்மா கொடுத்த கல்யாணப் பத்திரிகையை பையிலிருந்து எடுத்துப் பார்த்தேன். வேறு ஒரு தெரு பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. எனக்குத் திகைப்பாக இருந்தது. புதியதாக இங்கே எப்படி இன்னொரு கல்யாண மண்டபம் முளைத்தது என்று. நான் அறிந்த வரையில் இந்தப் பகுதியில் ஒரு கல்யாண மண்டபம்தான். அதில் உறுதியாக அப்போதும் இருந்தேன்.

கல்யாணப்பத்திரிகையில் குறிப்பிட்டிருந்த சரியான மண்டபத்திற்குள் நுழைந்தபோதுதான், ஒன்று புரிந்தது. என்கூட பள்ளியில் படித்த நண்பனின் வீடு கல்யாண மண்டபமாக மாறி விட்டிருந்ததென்று. தெருப் பெயரை கவனிக்காமல் விட்டது எவ்வளவு பெரிய தவறுஞ். ? கல்யாண மண்டபத்தின் பெயரும் என் ஞாபகத்தில் வரவில்லை.



கல்யாண மண்டபத்திற்குள் ஒரே கூட்டமாக இருந்தது. அலுவலகத்திலிருந்து அதிகம் பேர்கள் வந்திருப்பதாகத் தோன்றியது. பத்மாவின் அம்மா தூரத்தில் பேசிக் கொண்டிருந்தாள். உள்ளே வாவென்று கூப்பிடக்கூட வாசலில் யாருமில்லை. பத்மாவைப் பார்க்க முடிந்தது. பட்டுப்புடவையில் ஜொலித்தாள். அவளைச் சுற்றி அவளுடன் பழகும் அலுவலகப் பெண்மணிகள். பட்டுப் புடவைகளின் கனத்துடன் அவர்களுடைய கனத்தையும் சேர்த்துச் சுமப்பதுபோல் நின்றிருந்தார்கள்.

அ லு வ ல க த் தி ல் என்னுடன் பணிபுரிபவன், என்னை கண்டு கொண்டான்.




'சாப்பிட்டியா ?'
'ஆயிற்று.'
'இப்பத்தான் நீ உள்ளே நுழையிரே. அதற்குள் எப்படிச் சாப்பிட்டிருப்பே ? '
நான் அவனிடம் மாட்டிக்கொண்டதை உணர்ந்து 'வீட்ல லேசாக சாப்பிட்டு வந்தேன் ' என்று புளுகினேன்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு, பத்மாவின் முன் போய் நின்றேன். அவள் கணவரை எனக்கு அறிமுகப் படுத்தினாள். நானும் சிரித்தபடியே, அவர் கையைப் பிடித்துக் குலுக்கினேன். இந்த உயரமான தோற்றத்தில் பத்மாவிற்குப் பட்டுப் புடவை கச்சிதமாக இருப்பதுபோல் உணர்ந்தேன். என் பின்னாலிருந்து யாரோ என்னைத் தள்ளாதகுறையாக, பத்மாவை வாழ்த்திச் சிரிப்பது என் காதில் விழுந்தது. பத்மாவின் கவனத்திலிருந்து, நான் அப்புறப்படுத்தப் பட்டேன். யாரிடமும் சொல்லாமல், நான் அங்கிருந்து நகர ஆரம்பித்தேன். யாரும் என்னை சாப்பிட உபசரிக்கவில்லை. பத்மாவின் அம்மா யாருடனோ பேசிக்கொண்டே இருந்தாள். அவள் பார்வையில் தென்படும்படியாக, நான் இருந்தாலும், அவளுக்கு என் ஞாபகம் வராது. மண்டப வாசலுக்கு வந்தவுடன், யாரோ பை கொடுத்தார்கள். வாங்கிக்கொண்டு வேகமாக அலுவலகம் நோக்கி நடையைக் கட்டினேன்.



# மராமத்தில்லா

## சேதமடையும் சீனப் பெருஞ்சுவர்

உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் சேதமடைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக அதிசயங்களில் பிரம்மாண்டமான ஒன்று சீனப் பெருஞ்சுவர். சீனப் பேரரசர் கின் ஷி ஹுவாங்கின் யோசனையின் பேரில் இந்தப் பெருஞ்சுவர் கிழக்கே ஹெபேய் மாகாணத்தில் உள்ள ஷாங்ஹாய் குவானில் தொடங்கி மேற்கே லோப்நுர் வரையில் 8,850 கி.மீ. தூரத்துக்குப்



பிரம்மாண்டமாய் நீளும்.

சுமார் 2,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பல சிறப்புகளைப் பெற்ற சீனப் பெருஞ்சுவர் தற்போது சேதமடைந்து வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இடியும் நிலையில் இருக்கும் பகுதிகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தாலும் சுவரின் 30% சதவீதம் பலத்த சேதமடைந்து விட்டதால் இதனைச் சரி செய்யும் பணியில் சீன அரசு ஈடுபட்டுள்ளது.

மேலும், சீனப் பெருஞ்சுவரின் கட்டுமானங்கள் மிகவும் சிக்கலான முறை என்பதால் அதனை மிகவும் நுட்பமான முறையிலேயே அணுக வேண்டும் என்றும், அதற்காக முதற்கட்ட நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட இடங்களில் ட்ரோன்களைக் கொண்டு அளவெடுக்கும் பணி நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீனப் பெருஞ்சுவரின் இந்தப் பாதிப்புக்கு மாறிவரும் நவீன முறைகளே காரணம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.






# பெருஞ்சுவர்

### சீனப் பெருஞ்சுவரின் வரலாறு

உலகப் பேரதிசயங்களில் அதிசயம், சீனப் பெருஞ்சுவர். நிலவில் இருந்து பார்த்தால், மண்ணில் தெரியும், மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரே விஷயம் சீனப்பெருஞ்சுவர் என்று கூறப்படுகிறது.

சீனப் பெருஞ்சுவர் மிக நீளமானது மட்டுமல்ல, மிகவும் பழமையானதும் கூட. அதாவது, இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே கட்டப்பட்டது இச்சுவர். ஆனால் இந்தச் சுவர் பயத்தின் காரணமாகவே எழுந்தது.



2500 ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய சீன நாட்டுக்கு பரம எதிரிகளாக விளங்கியவர்கள் மங்கோலியர்கள். சீனாவுக்கு வடக்கே இருந்த அண்டை நாடுதான் மங்கோலியா. சக்தி வாய்ந்த குதிரைப்படை வைத்திருந்த மங்கோலியர்கள் அடிக்கடி சீனாவுக்குள் நுழைந்து கையில் கிடைத்ததை எல்லாம் அள்ளிச் சென்றனர்.

அன்றைய சீனா இன்று போல் மிகப்பெரிய, பரந்து விரிந்து பேரரசாகத் திகழவில்லை. ஏராளமான குட்டி மன்னர்கள்தான் ஆட்சி செய்தார்கள். மங்கோலியர் களின் படையெடுப்பை விரும்பாத அவர்கள், தங்களது நாட்டுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சீனாவின் வடக்கு எல்லையில் சுவர்களை எழுப்பத் தொடங் கினார்கள்.




ஒவ்வொரு அரசரும் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் சுவர்களை எழுப்பினார்கள். எனவே, தொடர்ச்சியாக இல்லாமல் துண்டு துண்டுப் பகுதிகளாகவே இந்தப் பெருஞ் சுவர் ஆரம்ப காலத்தில் இருந்தது. இறுக்கப்பட்ட மண் மற்றும் சரளைக்கற்களால் ஆரம்பத்தில் கட்டப்பட்ட இந்த பெருஞ்சுவர் அவ்வளவு வலிமை வாய்ந்ததாக இல்லை. வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களின் தாக்குதல்களை மட்டும் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவே அந்தச் சுவர்கள் இருந்தன.

கி.மு. 221—ம் ஆண்டில் சீனாவில் இருந்த சின் என்ற குறுநிலப்பகுதியை ஜெங் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். பலசாலியாக வலம்



கட்டி முடித்தனர். இதற்கு வான் லிகுவாங்கெங் என்று பெயரிட்டனர். கி.பி. 1368 முதல் 1644 வரை ஆட்சி செய்த மிங் வம்ச மன்னர்களின் காலத்தில் 6,400 கிலோ மீட்டர் வரை இந்தப் பெருஞ்சுவர் நீளம் கண்டது.

இதன் நீளத்தை வைத்தே, எத்தனை பேர் எவ்வளவு கடின உழைப்பைக் கொட்டி இந்தப் பெருஞ்சுவரை உருவாக்கியிருப்பார்கள் என்று ஊகிக்க முடியும்.

பல நூற்றாண்டுகள் தாண்டி சீனப்பெருஞ்சுவர் கம்பீரமாக நின்றிருப்பதே இதன் வலிமைக்குச் சான்று!

கடந்த 1987—ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்களுள் ஒன்றாக இது அறிவிக்கப்பட்டது. கொரியா எல்லையிலிருந்து கோபி பாலைவனம் வரை 6,400 கி.மீ தூரத்துக்கு நீண்டு செல்கிறது.

வந்த ஜெங், சின்னச் சின்ன நாடுகளாக சிதறிக் கிடந்த சீனாவின் பல பகுதிகளை ஒன்றிணைத்து அனைத்துப் பகுதிகளுக்கும் தனது நாட்டின் பெயரான சின் என்பதையே சூட்டினான். இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட புதிய அரசு சின் என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்டாலும் நாளடைவில் அந்த பெயர் சீனா என்று அழைக்கப்பட்டது.

அதேநேரம் புதிய அரசை நிறுவிய மன்னன் ஜெங் கையில் அனைத்து அதிகாரங்களும் குவிந்ததால் அவன் தன்னை சீனாவின் முதன் சக்கரவர்த்தியாக அறிவித்தான். அன்று முதல் அவன் சின் ஷி ஹிவாங் என்று அழைக்கப்பட்டான். இவனது ஆட்சிக் காலத்திலும் முக்கிய எதிரிகளான மங்கோலியர்கள் சீனாவின் மீது படையெடுத்தனர். இது மன்னன் சின் ஷி ஹிவாங்குக்குப் பெரும் தலைவலியாக இருந்தது. இதையடுத்து தனது புதிய பேரரசுக்கு உட்பட்ட நாடுகளுக்கு இடையில் இருந்த எல்லைச் சுவர்களை இடிக்க உத்தரவிட்டான். அதே நேரம் தனது ஆட்சிப் பகுதிக்கு உட்பட்ட சீனாவின் வடக்கு எல்லையில் தொடர்ச்சியான மிகப்பெரிய பெருஞ்சுவரை எழுப்பினான். இன்றைய சீனப்பெருஞ்சுவரின் பிரம்மாண்டம் இப்படித்தான் ஆரம்பமானது.




கி.பி. 221—ம் ஆண்டில் 5 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் வரை சுவரைக்

இத்தகைய சிறப்பு வாய்ந்த சீன பெருஞ்சுவரில் 30 சதவீதம் அளவுக்கு மணற்புயலினால் அரிப்பு ஏற்பட்டு பெரும் அபாயத்தில் உள்ளது. இந்த பகுதியில் மக்கள் நடமாட்டம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

இங்கே விமானத்தில் பயணம் செய்வது மிகவும் ஆபத்தான ஒன்றாகும். எனவே சீன அதிகாரிகள் எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய சிறிய ஆளில்லா விமானத்தை பணியமர்த்த சீனா முடிவு செய்துள்ளது. முப்பரிமாண இந்த ஆளில்லா விமானங்கள் பெருஞ்சுவரின் பல்வேறு பகுதிகளைப் படம் பிடித்து அளவுகளை துல்லியமாக குறித்து காண்பிக்கும்.

இதற்காக இன்டெலின் ஃபால்கான் 8+ என்ற முப்பரிமாண புகைப்படங்களை எடுக்கும் விமானங்கள் பயன்படுத்தப்படவுள்ளது.

ஜூன் 2003 வரை சீன அரசு சுவர்ப் பாதுகாப்புக்கான எந்தச் சட்டத்தையும் உருவாக்கவில்லை. விரிவான ஆய்வுகள் எதுவும் செய்யப்படவில்லை என கூறப்படுகிறது. இச்சுவரின் எவ்வளவு பகுதி எஞ்சியுள்ளது என்றும் கூறமுடியாதுள்ளது.


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# 26. இருளில் ஒரு குரல்

கணநேரம் ஜொலித்து உலகை ஜோதி வெள்ளத்தில் மூழ்குவித்த மின்னலின் ஒளியிலே, புத்த பிக்ஷு ஏரிக்கரையில் நின்று கைகளைத் தூக்கிப் பேய்ச் சிரிப்பு சிரித்த காட்சியைக் கண்டதும், சற்று நேரம் குண்டோதரன் பீதியினால் கைகால்களை அசைக்க முடியாதவனாய் மரத்தோடு மரமாக நின்றான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு சேற்றில் தட்டுத் தடுமாறிக் கரைமேல் நடந்தான். கரையைப் பிளந்து கொண்டு தண்ணீர் ஓடிய இடத்தை நோக்கி உத்தேசமாக அவன் நடந்தபோது மறுபடியும் கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒன்று மின்னியது. அதன் ஒளியில், வெட்டப்பட்டிருந்த கால்வாய், முன்னால் பார்த்ததைக் காட்டிலும் அகன்றிருப்பதையும், தண்ணீர் முன்னைவிட வேகமாய்க் கரையைப் பிளந்து கொண்டு போவதையும் பார்த்தான். புத்த பிக்ஷு நின்ற இடத்தில் அவரைக் காணவில்லை. ஆனால், மண் வெட்டி மட்டும் கிடந்த இடத்திலேயே கிடந்தது.



உடனே குண்டோதரனுடைய மனத்தில் சிறிது தைரியம் உண்டாயிற்று. கால்வாயை ஒரே தாண்டாகத் தாண்டி அப்பால் குதித்தான். அக்கரையில் கிடந்த மண்வெட்டியைக் கையினால் தடவி எடுத்துக்கொண்டு அவசர அவசரமாக மண்ணைச் சரித்து வாய்க்காலில் தள்ளத் தொடங்கினான். அப்படி தள்ளிக்கொண்டிருக்கும்போதே 'ஆஹா! இது வீண் பிரயத்தனம் போலிருக்கிறதே!' என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது.

அதே சமயத்தில் அவன் கழுத்தண்டை ஏதோ ஸ்பரிச உணர்ச்சி ஏற்படவே, சட்டென்று மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்தான். அவன் எதிரே கும்மிருட்டில் ஆஜானுபாகுவான ஒரு கரிய உருவம் நின்றது. அது புத்த பிக்ஷுவின் உருவந்தான் என்பதையும், அவர் தமது இரும்புக் கைகளால் தன்னுடைய கழுத்தைப் பிடித்துநெறிக்க முயல்கிறார் என்பதையும் ஒரு கணத்தில் தெரிந்துகொண்டான். குண்டோதரனுடைய வஜ்ரக் கைகள் புத்த பிக்ஷுவின் கை மணிக்கட்டுகளைப் பிடித்துக் கொண்டன. மறுகணத்தில் குண்டோதரனுடைய தலைக்கு மேலே நாகநந்தி பிக்ஷுவின் பேய்ச் சிரிப்பு மீண்டும் ஒலித்தது.

இடையிடையே வானத்தைக் கிழித்துக்கொண்டு தோன்றி மறைந்த மின்னல் வெளிச்சத்தினால் இன்னும் கன்னங்கரியதாகத் தோன்றிய காரிருளில், விளிம்பு வரை தண்ணீர் ததும்பி அலை






மோதிக்கொண்டிருந்த ஏரிக்கரையில், கணத்துக்குக் கணம் அகன்று வந்த உடைப்புக்கு அருகில், குள்ள உருவமுடைய குண்டோ தரனுக்கும் நெடிதுயர்ந்து நின்ற புத்த பிக்ஷுவுக்குமிடையே பிடிவாதமான மல்யுத்தம் ஆரம்பமாயிற்று. அந்த விசித்திரமான துவந்த யுத்தம் கால் நாழிகை நேரம் நடந்திருக்கலாம். அப்போது, கரையில் மோதிய ஏரி அலைகளின் 'ஓ' என்ற சத்தம், கரையைப் பிளந்துகொண்டு அப்பால் விழுந்த பிரவாகத்தின் 'ஹோ' என்ற சத்தம், வரவர வலுத்துக் கொண்டிருந்த 'சோ' என்ற மழைச் சத்தம், 'விர்' என்று அடித்த புயற்காற்றில் மரங்கள் பிசாசுகளைப்போல் ஆடிய மர்மச் சத்தம் ஆகிய இந்த நானாவிதப் பேரொலிகளையும் அடக்கிக்கொண்டு, "குண்டோ தரா! குண்டோ தரா!" என்ற கம்பீரமான குரல் கேட்டது.





துவந்துவ யுத்தம் செய்த இருவரும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றார்கள். ஆனால், அவர்களுடைய கைப்பிடி மட்டும் நழுவவில்லை. அது யாருடைய குரல் என்று குண்டோ தரன் சிந்தித்தான். அசோகபுரத்திலிருந்து வரும்போது, தனக்குப் பின்னாலும் குதிரையடிச் சத்தம் கேட்டது அவனுக்கு நினைவு வந்தது.

"குண்டோ தரா! சண்டையை நிறுத்து! உடைப்பை அடக்க முயலாதே! வீண்வேலை! ஓடிப்போய் ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்று! நான் சொல்லுவது காதில் விழுகிறதா?"

அந்தக் குரல் தன் எஜமானருக்கும் எஜமானரின் குரல் என்று குண்டோ தரன் அறிந்துகொண்டான்.

"விழுந்தது, பிரபு! ஆக்ஞை!" என்று கூவினான்.

குண்டோ தரன் மறு குரல் கொடுத்தானோ இல்லையோ, இன்னொரு பெரிய மின்னல் ஆயிரம் சூரியன் ஒளியை ஒத்துக் கண்களைக் குருடாக்கிய மின்னல் மின்னியது!

அடுத்தாற்போல் ஒரு பேரிடி இடிக்கப் போகிறதென்பதைக் குண்டோ தரன் உணர்ந்தான். "இடி முழக்கம் கேட்ட நாகம் போல்" என்னும் பழமொழி அச்சமயம் அவனுக்கு ஞாபகம் வந்தது. பிக்ஷுவின் கை மணிக்கட்டுகளை அவன் இன்னும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவன் எதிர்பார்த்ததுபோலவே இடி இடித்தது. அண்ட பகிரண்டங்கள் எல்லாம் இடித்து தடதடவென்று தலையிலே விழுவதுபோல இடித்தது. இடி இடித்து நின்றதும் குண்டோ தரனுடைய காதில் அதற்கு முன்னால் கேட்டுக் கொண்டிருந்த அலைச் சத்தம், மழைச் சத்தம் எல்லாம் ஓய்ந்து 'ஙொய்' என்ற சப்தம் மட்டும்



ஒலித்துக் கொண்டிருந்தது. "ஐயோ! காது செவிடாகி விட்டதா, என்ன?' என்று குண்டோ தரன் ஒரு கணம் எண்ணமிட்டான். ஆனால், அதே இடிச் சத்தம் காரணமாக நாகநந்தியின் பிடி தளர்ந்திருக்கிறது என்பதை அவன் தேக உணர்ச்சி சொல்லிற்று. அவ்வளவுதான்! தன்னுடைய வஜ்ர சரீரத்தின் முழுப்பலத்தையும் பிரயோகித்துப் பிக்ஷுவை ஒரு தள்ளு தள்ளினான்.

ஏரிக் கரையின் அப்புறத்தில் பிக்ஷு உருண்டு உருண்டு போய் கீழே உடைப்புத் தண்ணீர் பிய்த்துக் கொண்டிருந்த பள்ளத்தில் தொப்பென்று விழுந்ததைக் குண்டோ தரன் கண்டான். உடனே, ஒரு பெரிய அதிசயம் அவனைப் பற்றிக் கொண்டது. மின்னல் இல்லாதபோது புத்த பிக்ஷு கரையிலிருந்து உருண்டு பள்ளத்திலே விழுந்தது அவனுக்கு எப்படி தெரிந்தது? ஆஹா! இதென்ன வெளிச்சம்? குண்டோ தரன் சுற்று முற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு பனைமரம் உச்சியில் பற்றி எரிவதைக் கண்டான். ஆ! அந்த மரத்தின் மேல் இடி விழுந்து தீப்பிடித்துக் கொண்டிருக்கிறது வெளிச்சத்திற்குக் காரணம் அதுதான்!




பற்றி எரிந்த பனை மரத்தின் வெளிச்சத்தில் குண்டோ தரன் இன்னும் சில காட்சிகளைக் கண்டான். அந்தப் பனைமரத்தைத் தாண்டி ஒரு குதிரை அதிவேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அந்தக் குதிரை மேலிருந்தவர்தான் சற்று முன்னால் தனக்குக் குரல் கொடுத்தவர் என்பதை உணர்ந்தான். ஏரியின் ஓரமாக இன்னொரு மரத்தில் நாகநந்தி பிக்ஷு வந்த குதிரை கட்டப்பட்டிருப்பதையும் கண்டான். அதற்கு மேல் வேறொன்றையும் பார்க்கக் குண்டோ தரன் விரும்பவில்லை. அந்தக் குதிரை இருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து சென்றான். நடுவில் கால் சறுக்கிக் கீழே விழுந்ததைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை.

மரத்திலிருந்து குதிரையை அவிழ்த்துவிட்டு, அதன்மேல் குண்டோ தரன் ஏறினானோ இல்லையோ, பனைமரத்து வெளிச்சமும் அணைந்து விட்டது. அதுவரையில் சிறு தூறலாக இருந்தது அப்போது பெருமழையாக மாறியது. எத்தனையோ பெருமழையைக் குண்டோ தரன் பார்த்ததுண்டு. ஆனால் அன்றைய இரவு பெய்த மழை மாதிரி அவன் பார்த்ததேயில்லை. வானம் பொத்துக் கொண்டு, அதற்கு மேலே தங்கியிருந்த தண்ணீர் தொடதொடவென்று கொட்டுவதுபோல் மழை கொட்டிற்று.

"ஆஹா! ஏரி உடைப்புக்கும் இந்தப் பெரு மழைக்கும் பொருத்தந்தான். நல்ல நாள் பார்த்துத்தான் நாகநந்தி திருப்பாற்கடலை வெட்டிவிட்டார்!" என்று குண்டோ தரன் எண்ணிக் கொண்டான்.

"எப்படியும் இந்த ஏரி வெள்ளம் அசோகபுரம் போய்ச் சேர்வதற்கு முன்னால் நாம் போய்ச் சேரவேண்டும்" என்று தீர்மானித்தான்.

ஆனால், அந்தத் தீர்மானத்தை அவனால் நிறைவேற்ற முடியவில்லை. அந்த இருளிலும், மழையிலும் குண்டோ தரன் வழி கண்டுபிடித்துக் குதிரையை நடத்திக்கொண்டு அசோகபுரம் போய்ச் சேர்வதற்கு வெகுநேரம் முன்னாலேயே ஏரிக் கரை நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் உடைத்துக் கொண்டு வெள்ளம் பிரளயமாக ஓடத் தொடங்கி அசோகபுரத்தையும் அடைந்துவிட்டது.

(சபதம் தொடரும்)




SAKTHI CASH & CARRY
245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713
இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும் சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான பொருட்களும் கிடைக்கும்
வந்து பாருங்கள்!!!
வியந்து போவீர்கள் !!!
VARSHA
Ready to Cook
SWATHI CASH & CARRY
306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648




## உடல்நலம் கெடுக்கும் உணவுகள்

முன்பெல்லாம் வாரம் ஒரு முறை அல்லது மாதம் இருமுறை என்று தான் பெரும்பாலானோர் அசைவ உணவுகளை உண்டு வந்தனர். ஆனால், இன்றோ தினமும் சுகாதார முறையில் தயாரிக்கப்பபடாத தெருவோரக் கடைகளின் அசைவ உணவு வகைகளை உண்டு பல விதமான நோய்களுக்கு இரையாகி வருகின்றனர்.

மக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிலையங்கள் அருகில் அசைவ உணவுக் கடைகள் பெருகி வருவது சமுதாயத்திற்கு பெரும் தீங்காக அமையும்.




அக்கடைகளிலிருந்து தூக்கி எறியப்படும் மாமிசக் கழிவுகளால் துர்நாற்றம் எங்கும் பரவி சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதோடு, அக்கழிவுகளைச் சுற்றி ஈக்களும், கொசுக்களும் மொய்த்து அவை மனிதர்களைக் கடிக்கும்போது நோய்த் தொற்று கிருமிகளைப் பரப்புகின்றன.

சிலர் சுகாதாரமற்ற அசைவ உணவு வகைகளை இட்டு தங்கள் வயிற்றைக் குப்பைக் கூடையாக மாற்றி வருகிறார்கள். புரதம், வைட்டமின், கனிமச் சத்து அறவே இல்லாமல், உப்பும், கொழுப்பும் கொண்ட உணவுகளை துரித உணவுகள் என வரையறுத்துள்ளது தேசிய உணவுக் கழகம். இந்த




ஃபாஸ்ட்புட் எனப்படும் துரித உணவு காலசாரம் நகரப்பகுதிகளில் கிட்டத்தட்ட 80 சதவீதம் ஆக்கிரமித்து விட்டது. துரித உணவுக் கடைகளில் அசைவ உணவு உண்பது என்பது இளைஞர்களிடையே ஒரு நவீன கலாசாரமாக மாறி விட்டது.

ஒரு கிலோ மாமிசம் உற்பத்தி செய்ய 10 கிலோ தானியம் தேவைப்படுகிறது. கால்நடைகளை அதிக அளவில் பண்ணைகளில் அடைத்து வைக்கும் போது, அவை உண்ணும் உணவு செரிக்கும் போது உலக அளவில் சுமார் 37 சதவீதம் மீத்தேன் வாயு வெளி வருகிறது. இந்த வாயு கார்பன்—டை ஆக்ஷஸடு வாயுவை விட 23 மடங்கு அதிகமாக புவி வெப்பமயமாதலுக்கு காரணமாகிறது.

இந்த துரித உணவு காலாசாரத்தால், பெருகி வரும் அசைவ உணவுக் கடைகளில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் பெரும்பாலும் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுவதில்லை என்பதால், இதை உண்பவர்களை பல்வேறு நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது. இந்த துரித உணவுகளில் சுவைதான் அதிகமாக இருக்குமே தவிர உடல் நலத்திற்கு தேவையான சத்துகள் இருப்பதில்லை.

உணவுக் குழாய், வயிற்றுப் பகுதி, குடல் பகுதிகளில் ஏற்படும் புற்று நோய் நமது உணவின் தன்மைக்கு ஏற்ப அமைகிறது. அசைவ உணவுகளில் அதிக அளவில் நைட்ரோ அமினோ அமிலச் சத்துகள் இருப்பதால் உணவுக் குழாய், இரைப்பை பகுதிகளில் புற்றுநோய் ஏற்பட ஏதுவாகிறது.

இத்தகைய அசைவ உணவுக் கடைகளில் தயாரிக்கப்படும் உணவு சுவையாக இருக்க வேண்டும் என்பதற்காக சேர்க்கப்படும் ரசாயனப் பொருள்களினால் உடல் நலத்திற்கு தீமையே விளையும். இக்கால இளைஞர்கள் இத்தகைய சுகாதாரமற்ற உணவுகளை உண்டு, கொழுப்பு அடைக்கப்பட்ட ஊளைச் சதையர்களாக உலா வருகின்றனர்.


இளம்தலைமுறையினர் தொடர்ந்து இத்தகைய கடைகளில் தயாரிக்கப்படும் சுகாதாரமற்ற அசைவ




பாறப்புறத் இராதாகிருஷ்ணன்

உணவுவகைகளை சாப்பிட்டு வந்தால் 50 வயதில் கண்டிப்பாக அவர்கள் புற்றுநோய் உள்ளிட்ட உயிர்க்கொல்லி நோய்களால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

மேலும், தொற்றுநோய் அல்லாத நீரிழிவு, மாரடைப்பு, இதயம் சம்பந்தமான நோய்கள், புற்றுநோய், பல் நோய்கள், எலும்பு மற்றும் மூட்டுகளில் வரும் நோய்கள், நாளமில்லாச் சுரப்பிகளில் வரும் நோய்கள் (முன்கழுத்துக் கழலை, தைராய்டு), உடல் பருமன், சரும நோய்கள்,




ஒவ்வாமை, பக்கவாதம் போன்ற நோய்கள் ஆரோக்கியமற்ற அசைவ உணவுகளை உண்பதால் தான் வருகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும், பல நாடுகளில் நடத்தப்பட்ட 60—க்கும் மேற்பட்ட மருத்துவ ஆராய்ச்சி முடிவுகளிலும் இதய நோய் மற்றும் புற்றுநோய் குழந்தைகளைத் தாக்குவதற்கு காரணம் இத்தகைய கடைகளிலிருந்து உண்ணப்படும் அசைவ உணவுகள்தான் என உணவியல் மற்றும் உணவு அறிவியல் கழகம் தெரிவிக்கிறது.

ஆடுகள், கோழிகளை நோய் தாக்காமலிருப்பதற்கும், அவற்றின் எடையை அதிகரிக்கவும் ஸ்டீராய்டு மற்றும் டெட்ராசைக்ளின், ஃப்ளுரோகுயினோலின், அமினோகிளைகோஷைட் போன்ற ஆன்டிபயாடிக் மருந்துகளை ஊசி வழியாக அவற்றுக்குச் செலுத்தி, அவற்றைக் கொன்று உணவுகளைத் தயாரிப்பதால் இத்தகைய உயிர்க்கொல்லி மருந்துகள் கொஞ்சம் கொஞ்சமாக நம் உடலுக்குள் ஊடுருவி பல நோய்களை நமக்குத் தருகின்றன.




சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் அசைவ உணவுகள், சிறுநீரக பாதிப்பு, கால்சியம் குறைபாடு, ஜீரண சக்தி குறைபாடு போன்றவற்றையும் ஏற்படுத்தும்.

வள்ளுவர் முதல் வள்ளலார் வரை எத்தனையோ ஞானிகள் உயிர்க் கொலை கூடாது, மாமிச உணவு தீது, உயிர்கள் மீது கருணை காட்ட வேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளனர்.

அண்மைக்காலமாக மேலைநாடுகளில் அசைவ உணவைத் தவிர்த்து சைவ உணவையே உட்கொள்ளுமாறு தீவிர பிரசாரம் நடந்து வருகிறது. சைவ உணவின் சிறப்பை உணர்ந்து தான் திருவள்ளுவரும் புலால் உணவை விலக்கும்படி வலியுறுத்தியிருக்கிறார். அவர், கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என்று கூறுகிறார்.

சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்? அதுபோல, உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் வாழ்வும் சிறப்பாக இருக்கும். எனவே, நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்றால் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் அசைவ உணவுகளைத் தவிர்ப்போம்.



# ஒருதாய்

## இவர்களும் வாழட்டும்

“**தா**யின் அன்பு மகத்தானது, அது அச்சமற்றது, எல்லைகளற்றது, அது தியாகத்தின் உண்மையின் உரு’ என்று போற்றுகிறார் வீரத்துறவி விவேகானந்தர். இதற்கு உதாரணமாக ஒரு சம்பவம் நம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சொல்லப்பட்டு வருகிறது.

வீர சிவாஜியின் ராய்காட் கிழக்குப் பகுதி கோபுரத்திற்கு ஹீரா கோபுரம் என்று பெயர். ஹீரா என்ற பால்காரப் பெண் பக்கத்து மலையடிவார கிராமத்தில் இருந்து அன்றாடம் ராய்காட் கோட்டைக்குப் பால் விற்க வருகிறாள். அவள்




பால் விற்றுத் திரும்பும் முன் ஒருநாள் கோட்டைக் கதவுகள் மூடப்பட்டுவிடுகின்றன. கிராமத்தில் இருக்கும் தன் குழந்தையை எப்படியும் சென்றடைய வேண்டும் எனும் வேகத்தில் கோட்டையின் கிழக்குப் பகுதியில் மதில் சுவர் ஏறிச் செங்குத்தான— அபாயகரமான மலையை இருள் நேரத்தில் கடந்து செல்கின்றாள்.




மறுநாள், பால் விற்கக் கோட்டைக்குள் வருபவள் தடுத்து நிறுத்தப்படுகிறாள். அவள் எப்படி அங்கிருந்து வெளியேறினாள் என்பதை விசாரிக்க வீரசிவாஜியின் ஆட்சி மன்றத்திலே நிறுத்தப்படுகிறாள். அவள் கூறுவதையெல்லாம் கேட்ட வீரசிவாஜியோ, மீண்டும் அப்படிக் கோட்டையில் ஏறி மலையில் இறங்கிக் காட்ட முடியுமா என்று கேட்க, கோட்டையில் ஏறிய பெண், மலையைக் கண்டு மலைத்து, இப்போது சாத்தியமில்லை— ஆனால், நேற்று இந்த வழியில்தான் மகனைக் காணும் ஆவலில் இறங்கிச் சென்றேன் என்கிறாள். வீரசிவாஜி அந்தப் பெண் தன் குழந்தைக்காக இறங்கிச் சென்றதை நம்புகிறார். அங்கே ஒரு கோபுரம் அமைக்கப்பட வேண்டும் என்பதை உணரும் அவர், காவல் கோபுரத்தை அமைத்து, அதற்கு ஹீரா கோபுரம் என்றுபெயரிட்டு அந்தத் தாயின் அன்பை, தியாகத்தை, மன உறுதியை கௌரவிக்கிறார். இன்றளவும் ஹீரா கோபுரம் உயர்ந்து நிற்கிறது.

இத்தகைய அன்பும் அச்சமின்மையும் அன்னைக்கு இயல்பானது. எந்தத் தாயும் தன் குழந்தைக்கு என்ற எண்ணம் தோன்றும்பொழுது அளவற்ற சக்தி கொண்டவளாக இருக்கிறாள். சாத்தியமற்றது எனும் சொல்லுக்குத்

> **There will be so many times you feel like you failed. But in the eyes, ears, and mind of your child, you are a**
> **SUPER MOM.**
> **—Stephanie Precourt**



# பிள்ளை


கோதை ஜோதிலட்சுமி

தாயின் மனதிலும் செயலிலும் இடமில்லை.

பல நேரங்களில் தகப்பன் மறைவுக்குப் பின் தாய் பொறுப்பேற்கும் குடும்பங்களில் இத்தகைய மனோதிடம் வாய்ந்த தாய்மார்களைப் பார்த்திருக்கிறோம்.

தற்காலத்தில் இன்னும் சில அம்சங்களால் தனித்து வாழும் தாய்மார்கள் அதிகரித்து வருவதையும் காண்கிறோம். மணமுறிவு வேண்டுமென நீதிமன்றத்தில் வந்து விவாகரத்து செய்துகொள்ளும் தாய்மார்களும், பெரும்பாலும் அவர்களே குழந்தையைக் கோரிப் பெற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றனர். இதனை இரட்டைப் பொறுப்பு என்று சொல்லலாம். சுலபமாக நிறைவேற்றக் கூடியது அல்ல என்றாலும், அதனை ஏற்பதில் எந்தப் பெண்ணுக்கும், தாய்க்கும் தயக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.




அதேபோல, கணவன் இல்லாத அல்லது திருமணம் செய்துகொள்ளாத பெண்களும் குழந்தையை தத்து எடுத்துக் கொண்டு, தன்னை அன்னையாய் உயர்த்திக் கொள்வதோடு குழந்தையின் வாழ்வையும் மேம்படுத்துவதைக் காண்கிறோம்.

இத்தகைய முடிவுகளை மிகச் சிலரே மேற்கொள்கின்றனர் என்றபோதும், அவர்களையும் ஒற்றைப் பெற்றோருக்கான பார்வையோடுதான் அணுக வேண்டும். பெருகும் குடும்ப நல நீதிமன்றங்களும் மணமுறிவு வழக்குகளும் ஏற்புடையவை அல்ல என்றபோதிலும், மறுப்பதற்கும் இல்லை. மணமுறிவு செய்துகொள்வதற்கான உரிமை




தேவையில்லை என ஒதுக்கிவிட முடியாது. குழந்தைகளின் உளவியல் தேவைகளின் மீது கவனம் செலுத்த வேண்டியதுதான் இந்நிலையில் அவசியமானதாகிறது.

ஒற்றைப் பெற்றோர்அதிகரித்து வருவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், அன்றாட வாழ்க்கையின் பொறுப்புகள் மற்றும் சவால்கள் என்று வரும்பொழுது, ஒற்றை பெற்றோர்களுக்குச் சில பிரச்னைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவர்கள் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்ற என்னவெல்லாம் இடர்களைச் சந்திக்கிறார்கள்?

குடும்பம் என்பது ஓர் அடிப்படையான கட்டமைப்பு. பிறந்தது முதல் இறுதி மூச்சு வரை உளவியல், வாழ்வியல் சார்ந்த தொடர்புகளை நமக்கு ஏற்படுத்தித் தருவது குடும்பம் எனும் கட்டமைப்பே. சமூகத்தில் குழந்தையுடன் தனியாக வாழும் பெண்களுக்குப் பல தொந்தரவுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றனஎன்றாலும், அவற்றை அவர்கள் ஒருவாறு சமாளிக்கும் திறன் கொண்டவர்களாக இயல்பிலேயே இருக்கிறார்கள். ஆனால் உளவியல் மற்றும் பொருளியல் சிக்கல்கள் ஏற்படும் பொழுதுதான் இத்தகைய தாய்மார்கள் மிகுந்த வேதனையை சந்திக்கிறார்கள். துணை இல்லாமல் குழந்தைகளைக் காப்பதும் வளர்ப்பதும் முன்னேற்றுவதும் மிகப் பெரிய சவால். அப்படியான சவால்களை அன்றாடம் இவர்கள் சந்தித்தாக வேண்டும்.




தாய் மற்றும் தந்தை இருவரின் பொறுப்புகளையும் வகிக்கும் அன்னை பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள வெளியில் சென்று சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்நிலையில், வீட்டுப் பொறுப்புகள், அலுவலக வேலைகள், குழந்தைக்கான அன்றாடக் கடமைகள் என அவர்கள் அனைத்து நிலைகளிலும் அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். இதனையும் தாண்டி குழந்தையின் தனிமையைப் போக்க அதிக நேரம் அவர்களோடு செலவிட வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது.

ஒருவிதமான அச்ச உணர்வோடு இவர்கள் தங்கள் ஒவ்வொரு நாளையும் நகர்த்துகிறார்கள். யாரை நம்புவது யாரைத் தவிர்ப்பது என்பதில் மிகுந்த கவனமும் இவர்களுக்குத் தேவையாய் இருக்கின்றது. ஒரு வீட்டை வாடகைக்கு எனஏற்பாடு செய்து கொள்வதில் கூட சிக்கல் நீடிக்கும் நிலையில்தான் நம் சமூக அமைப்பும் இருக்கிறது. தங்கள் பிள்ளைகளோடு தனித்து வாழும் தாய்மார்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களை யாரும்அணுகுவதோ உதவ முன்வருவதோ இன்றளவும்கூட சமூகத்தில் அரிதாகவே காணப்படுகிறது. பணியிடங்களிலும் இவர்கள் மீதான புரிதல் இன்னும் நாகரிகமாக இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

நல்ல பொருளாதார நிலையில் உள்ள பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்னைகளைவிட நடுத்தர வர்க்கப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் சற்று அதிகம். மேல்தட்டுப் பெண்களுக்குள்ள சுதந்திரமும் துணிவும் இவர்களுக்கு இன்னும் சாத்தியப்படவில்லை. ஆனாலும், குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்துவதில் இவர்களுக்குள்ள மன உறுதி சற்றும் குறைத்து மதிப்பிடத் தகுந்ததல்ல.

இந்தக் குடும்பங்களில் குழந்தைகளும் மிகுந்த பொறுப்போடு வளர்கின்றனர் என்றே சொல்லலாம். தாய் தனித்து நின்று, அனைத்து நிலைகளிலும் ஏற்படும் அழுத்தத்தை சமாளிப்பதை உடனிருந்து காணும் குழந்தைகள்அதிக அன்பும், மரியாதையும் கொண்டே வளர்கின்றனர். முன்னேறுவதற்கான துடிப்பு இவர்கள் மனதில்

மிக அழுத்தமாக உள்ளதென்பதும் மறுக்க முடியாத உண்மை. அதேநேரத்தில், உளவியல் சிக்கல்களும் இவர்களுக்குப் பல நேரங்களில் தவிர்க்க முடியாததாகிறது.

சமூக அமைப்பிலும், தனிமனித அளவிலும் இப்படி தாயின்அரவணைப்பில் மட்டும் வளரும் குழந்தைகள் மீதான புரிதல் அதிகரிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அந்தக் குழந்தைகளின் மனஅழுத்தம், தனிமை எண்ணம் போன்றவற்றைப் புரிந்து கொள்ளும்பட்சத்தில் மட்டுமே அவர்களுக்கு சமூகத்தின் மீது மரியாதை தோன்றும். இந்தத் தலைமுறை தாய்மார்களின் கல்வி இத்தகு பிள்ளைகள் எதிர்கொள்ளும் உளவியல் பிரச்னைகளைப் புரிந்துகொள்வதை சாத்தியமாகியுள்ளது என்பதும் உண்மை. கல்வி அறிவு கொண்ட பெண் ஒரு குடும்பத்தையே கல்வியில் மேம்படச் செய்கின்றாள் என்னும் உண்மையையும் இத்தகைய பெண்கள் நிரூபிக்கின்றனர்.

அரசும் பல விதங்களில் இத்தகைய ஒற்றைப் பெற்றோரின் நிலையைப் புரிந்து கொண்டு அவர்களின் வாழ்வை எளிமையாக்க முயல்கிறது. பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைச் சேர்ப்பதற்குத் தந்தையின் எந்தத் தகவலும் அவசியம் இல்லை என்பதில் தொடங்கி, உதவித் தொகை வரை, பல நிலைகளில் அரசு உதவித் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. தாயின் பெயரைக் கொண்டு முதல் எழுத்து அமைத்துக் கொள்வதை சட்டமாக்கி இருக்கிறது. ஒற்றைப் பெற்றோருக்கு அவர்களின் பொருளாதாரத் தேவைகளை மனதில் கொண்டு வரிச்சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

இதுகுறித்த தகவல்களை www.naari.in என்ற வலைதளத்திலும், பெண்கள் தங்களுக்கான மற்றும் தங்கள் குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள www.wcd nic.in > schemes - listing பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் வலைதளத்திலும் காணலாம். தனித்து வாழும் பெண்கள் தங்களுக்கு

BEING A SINGLE PARENT IS TWICE THE WORK, TWICE THE STRESS AND TWICE THE TEARS BUT ALSO TWICE THE HUGS, TWICE THE LOVE AND TWICE THE PRIDE

UNKNOWN




ஏற்படும் பிரச்னைகளை மகளிர் ஆணையத்தில் புகாராகவும் பதிவு செய்யலாம். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் உதவுவதற்கென இத்தகைய பல திட்டங்களை வகுத்துச் செயல்படுகின்றது என்றாலும், அவை போதுமானதாக இல்லை என்பதும், தேவையானவர்களை முழுமையாகச் சென்றடையவில்லை என்பதும் வருத்தத்திற்குரியது. இந்தத் தகவல்கள் எல்லா தரப்புப் பெண்களையும் சென்றடைவதற்கான வழிகளைக் கண்டறிந்து, அரசு செயல்படுத்த வேண்டியது அவசியம்.



ஒற்றையாய் நின்று குடும்பம் பேணிய பெண்கள் சில காலங்களுக்கு முன்பு வரை நிராகரிக்கப்பட்டனர், சமூகத்தால் தூற்றப்பட்டனர். காலத்தின் வேகமான ஓட்டத்தில் இப்போது அந்த நிலை சற்றே மாறி வருகிறது.

இந்தப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அங்கீகாரம் கிடைப்பதற்கான சூழ்நிலைகளும் ஆரோக்கியமான அணுகுமுறைகளும் மெல்ல உருவாகத் தொடங்கியுள்ளன. மேல்தட்டு மக்களிடையே உருவாகியிருக்கும் இந்த மாற்றம், நேர்மறையான அணுகுமுறை சமூகத்தின் எல்லா நிலைகளிலும் ஏற்பட வேண்டும். நடுத்தர வர்க்கப் பெண்களும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் இயல்பாகவும் வாழ்வதற்கான சூழலை உருவாக்கித் தருவது அறிவுடைச் சமுதாயத்தில் ஒவ்வொரு தனி மனிதருக்குமான கடமையே!

# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**


# 2018 CALENDAR

**2018**


JANUARY




FEBRUARY



MARCH



APRIL



MAY




JUNE



JULY



AUGUST



SEPTEMBER



OCTOBER



NOVEMBER



DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡളി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा